# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024 - 2025

### மானியக் கோரிக்கை எண். 42


## திரு. உதயநிதி ஸ்டாலின்
இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு

2024

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
| --- | --- | --- |
| **1** | **முன்னுரை** | 1 |
| **2** | **தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் (TNCDW)** | 15 |
| 2.1 | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வரலாறு | 17 |
| 2.2 | நிறுவன அமைப்பு | 19 |
| **3** | **சுய உதவிக் குழு இயக்கம் மற்றும் மகளிர் திட்டம்** | 23 |
| 3.1 | பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) திட்டம் | 25 |
| 3.2 | மகளிர் திட்டம் | 28 |
| **4** | **தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் வாழ்வாதார இயக்கங்கள்** | 31 |
| 4.1 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) | 34 |
| 4.2 | தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் (NRETP) | 35 |
| 4.3 | தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU-GKY) | 37 |
| 4.4 | தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (TNULM) | 37 |

| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| **5** | **தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் உள்ள சங்கங்கள்** | 39 |
| 5.1 | தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) | 41 |
| 5.2 | முற்றம் மாத இதழ் | 43 |
| 5.3 | தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் சந்தைப்படுத்தல் சங்கம் (TNSSMS) | 46 |
| **6** | **தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)** | 49 |
| 6.1 | நிறுவன கட்டமைப்பு மற்றும் திறன் மேம்பாடு | 52 |
| 6.2 | நிதி உள்ளாக்கம் மற்றும் நுண் கடன் பெறுவதற்கான வழி முறை | 73 |
| 6.3 | கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு மூலம் சமூக செயல்பாடுகள் | 88 |
| 6.4 | வாழ்வாதார மேம்பாடு | 100 |

| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 6.5 | திறன் பயிற்சி | 128 |
| 6.6 | விருதுகள் | 136 |
| 7 | **தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம்** | 139 |
| 7.1 | மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்புகள் (MBLFs) | 143 |
| 7.2 | மின்னணு நிதி பரிவர்த்தனை | 144 |
| 7.3 | இரட்டை அங்கீகாரத்திற்கான முன்னோட்டம் | 146 |
| 8 | **தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம்** (DDU-GKY) | 149 |
| 8.1 | உன்னதி திட்டம் (UNNATI) | 153 |
| 8.2 | முன்னாள் மாணவர்கள் சந்திப்பு (Alumni Meet) | 154 |
| 8.3 | மென் திறன் பயிற்சி (Soft Skill Training) | 155 |
| 8.4 | நிரந்தர வேலைவாய்ப்பு நிறுவனங்கள் | 156 |
| 8.5 | வாழ்வாதார உதவி மையம் (Livelihood Call Centre) | 157 |

| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| **9** | **தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (TNULM)** | 159 |
| 9.1 | தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் திட்டக்கூறுகள் | 163 |
| 9.2 | கூட்டாண்மை மற்றும் பிற துறை ஒருங்கிணைப்பு | 176 |
| **10** | **தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம் (TNRTP) @ வாழ்ந்து காட்டுவோம் திட்டம் 2.0 (VKP)** | 179 |
| 10.1 | திட்டத்தின் முக்கியக் கூறுகள் | 183 |
| 10.2 | திட்டத்தின் முக்கிய செயல்பாட்டு நுணுக்கங்கள் | 184 |
| 10.3 | 2024–25 ஆம் ஆண்டிற்கு முன்மொழியப்பட்டுள்ள செயல்பாடுகள் | 224 |
| **11** | **முடிவுரை** | 225 |

# 1. முன்னுரை

## முன்னுரை

'முடியுமா நம்மால்' என்பது தோல்விக்கு முன்பு வரும் தயக்கம்.

'முடித்தே தீருவோம்' என்பது வெற்றிக்கான தொடக்கம்'

– **முத்தமிழறிஞர் கலைஞர்** அவர்கள்,
மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர்

நாட்டிற்கே முன்னுதாரனமாகத் திகழும் உன்னதத் திட்டமான சுய உதவிக் குழு இயக்கத்தை வடிவமைத்து, அதை வெற்றிகரமான இயக்கமாக வார்த்தெடுத்து, இன்று பல இலட்சக்கணக்கான மகளிரின் வாழ்வில் ஒளியேற்றியவர் நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான் என்பது மிகையல்ல.

வறுமை ஒழிப்புத் திட்டங்களின் முன்னத்தி ஏராக விளங்கி வரும் மகளிர் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தீனதயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகிய திட்டங்கள் இன்று, ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி அனைத்து மக்களுக்கும் பயன் பெறுவதற்கு அடித்தளமிட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே.

இச்சீர்மிகு திட்டங்களால் நம் தமிழ்நாட்டின் கடைக்கோடி கிராமத்தில் வசிக்கும் பெண்கள் கூட இன்று பல்வேறு பயிற்சிகள் பெற்று, தொழில் முனைவோராகி, பொருளாதார சுயசார்பும், தன்னம்பிக்கையும் மிக்கவர்களாகத் திகழ்கின்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில், சுய உதவிக் குழுக்களின் மகளிருக்கு தன்னம்பிக்கை ஏற்படுத்தி, அவர்களின் முன்னேற்றத்தில் உள்ள தடைகளைத் தகர்த்து, அவர்களுக்கு வளமான வாழ்வை பெற்றுத் தரும் வகையில் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

"ஏழைகளின் சிரிப்பும் – மகளிரின் மகிழ்ச்சியும்தான்

சிறந்த நிர்வாகத்திற்கு உண்மையான அளவுகோல்!"

**மு.க. ஸ்டாலின்** அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

பெண்களின் பொருளாதார சுதந்திரம், சமூக பொருளாதாரம் மற்றும் அரசியல் அதிகாரத்தை பல்வேறு திட்டங்கள் மூலம் செயல்படுத்த முயற்சிப்பதில் தமிழக அரசு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. மாநிலத்தில் பெண்களின் மக்கள் தொகை கிட்டத்தட்ட சம பங்கில் உள்ளது. மகளிர் தங்கள் குடும்பம் மற்றும் அடுத்த தலைமுறையினருக்காக சமூக மற்றும் பொருளாதார முடிவுகளை சிறப்பாக எடுப்பதால், அவர்களுக்கு அதிகாரமளிப்பது பொருளாதாரத்தில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்துகிறது.

பெண்களின் சுய மரியாதையை ஊக்குவித்தல், சொந்த விருப்பங்களை தீர்மானிக்கும் திறனை வளர்த்தல் மற்றும் அவர்களின் உரிமை மூலம் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சமூக மாற்றத்தை ஏற்படுத்துதல் வழியாக பெண்களின் அதிகாரமளித்தல் மேம்படுத்தப்படுகிறது.

பெண்களை அதிகாரப்படுத்துவதற்கான தொலைநோக்கு திட்டங்களை உருவாக்குவதில் தமிழ்நாடு ஒரு குறிப்பிடத்தக்க முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இத்தகைய முன்முயற்சிகளால் மகளிர் எவ்வித பாகுபாடுகளும் இன்றி சமூகத்தில் நிலைத்திருப்பது அரசின் உறுதிபாட்டை வலியுறுத்துகிறது. 1929–ஆம் ஆண்டிலேயே நடைபெற்ற சுயமரியாதை இயக்க மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் 1989–ஆம் ஆண்டு பெண்களுக்கான சம சொத்துரிமை வழங்குதலை சட்டமாக்கியதே இதற்கான ஒரு சிறந்த உதாரணம் ஆகும்.

வளர்ந்து வரும் தொழில்மயமாக்கலுடன் இணைந்து கல்வி, வேலைவாய்ப்பு, முக்கிய உள்கட்டமைப்பு வசதிகள், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் மக்கள் நல திட்டங்கள் போன்றவற்றில் செயல்படுத்தப்படும் புதுமையான

சமூகப் பொருளாதார கொள்கைகளை செயல்வடுத்துவதன் மூலம் நாட்டிலேயே பெரும் அதிகாரம் பெற்றவர்களாக தமிழ்நாட்டு மகளிர் திகழ்கிறார்கள்.

1989–ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் தொடங்கப்பட்ட சுய உதவிக் குழு இயக்கம், பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்கான மற்றுமொரு முக்கிய நடவடிக்கையாகும். பெண்களுக்கான ஒருங்கிணைந்த அதிகார பகிர்வு மூலம் வறுமை ஒழிப்பு, சமூக மாற்றம், சமூக பொருளாதார மேம்பாடு மற்றும் நிதி உள்ளாக்கம் ஆகியவற்றை செயல்படுத்துவதில் மகளிர் சுய உதவிக் குழு இயக்கமானது ஒரு துரிதப்படுத்தும் காரணியாக உள்ளது.

ஏழை மற்றும் விளிம்பு நிலையிலுள்ள பெண்களை இலக்காக கொண்டு, சமூக ஒருங்கிணைப்பு, சுய வேலைவாய்ப்பு மற்றும் குழு

செயல்பாடுகள் மூலம் 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட மகளிரின் வாழ்விற்கும், வாழ்வாதாரத்திற்கும் உதவ சிறு, குறு நிறுவனங்கள் மற்றும் தொழில் தொகுப்புகள் போன்றவை உருவாக்கப்பட்டன.

தற்பொழுது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது கிராம, நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்கள் மற்றும் உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்தி வருகிறது. சமூகம் சார்ந்த வளர்ச்சியை அடிப்படையாக கொண்டு ஏழைகளுக்கான நிறுவனங்களை உருவாக்குதல், சமுதாய மூலதனங்களை உருவாக்குதல் மற்றும் நிலையான வாழ்வாதாரம் ஆகியவை இத்திட்டங்கள் மூலம் உறுதி செய்யப்படுகிறது.

அரசின் சேவைகள் கடைகோடியில் உள்ள ஏழை, விளிம்புநிலை, நலிவுற்ற மகளிர் மற்றும்

அவர்களது குடும்பங்களின் சமூக–பொருளாதார நிலையை மேம்படுத்துவதை உறுதி செய்தலே இத்தகைய திட்டங்களின் முக்கிய குறிக்கோளாகும். மேற்கண்ட திட்டங்களால் உருவாக்கப்பட்ட சமுதாயம் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் சமுதாய வல்லுநர்கள் அரசின் சேவைகள் மற்றும் திட்டங்களின் பயன்கள் ஏழை மக்களுக்கு கொண்டு செல்ல ஒரு பாலமாக அமைகின்றன.

சுய உதவிக் குழுக்களின் திறன்களை வலுப்படுத்துவதிலும், அவற்றை ஊராட்சி, வட்டார மற்றும் மாவட்ட அளவில் கூட்டமைப்புகளாக உயர்த்துவதிலும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. திறன் மேம்பாட்டின் மூலம் தனிநபர் மற்றும் குழு நிறுவனங்களை வலுப்படுத்துவதுடன், சுய உதவிக் குழு தயாரிப்புகளை ஒருங்கிணைத்து, அவற்றின் மதிப்பு கூட்டி, உற்பத்தி பொருட்களின் தர நிர்ணயம் மற்றும் வணிக

அடையாளப்படுத்தி, நேரடி விற்பனை மற்றும் இணைய தளங்களின் வாயிலாக உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தை வாய்ப்புகளை உருவாக்குவதில் இந்நிறுவனம் முக்கிய பங்காற்றி வருகிறது.

மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாகுபாடுகளை முடிவுக்கு கொண்டு வருதல், கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளங்களுக்கு சம வாய்ப்புகள் வழங்குதல் போன்றன ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்கு 5–ன் குறிக்கோளாகும். பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் போன்ற பல அம்சங்களில் தமிழ்நாடு சிறப்பாக செயல்படுகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது, நிலையான வளர்ச்சி இலக்குகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட ஆறு இலக்குகளை அடைவதற்காக தொடர்ச்சியாக முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது. அவை.

1. வறுமையின்மை
2. பசியின்மை
3. நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு
4. பாலின சமத்துவம்
5. கண்ணியமான பணிகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி
6. சமத்துவமின்மையை குறைத்தல்

சமுதாயம் சார்ந்த அமைப்புக்களான ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் மூலம் பயிற்சி பெற்ற வல்லுனர்களால் உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் ஆகிய தலைப்புகளின் கீழ் சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் வட்டார அளவில் உருவாக்கப்பட்டுள்ள வானவில் மையம் என்று அழைக்கப்படும் பாலின மன்றத்தின் மூலம் பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்திட, சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த

அமைப்புகளுக்கு பாலினம் குறித்த பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு மாநிலம் முழுவதும் ஊரக மற்றும் நகரப்புற ஏழை மகளிருக்கான பல்வேறு வாழ்வாதாரத் திட்டங்களைச் செயல்படுத்தி, தொடர்ந்து முயற்சித்து வருகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது பிற துறைகளின் ஒருங்கிணைப்புடன் வறுமை ஒழிப்பு, வாழ்வாதார மேம்பாடு மற்றும் இதர திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஏழை மற்றும் சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ள மகளிரின் நிலையான வருமானத்தை வாழ்வாதார திட்டங்கள் மூலம் உயர்த்துவதோடு

மட்டுமல்லாமல் இவர்களின் அனைத்து உரிமைகளையும் பூர்த்தி செய்து, திட்டங்களின் பலன்கள் மூலம் வாழ்க்கை தரம் உயர வழிவகுக்கிறது.

மாநில அரசு, பல்வேறு கொள்கைகள் வகுத்து, குறிப்பிடத்தக்க செயல்பாடுகளை வடிவமைத்து, அதற்கேற்ப திட்டங்களை செயல்படுத்தி வறுமையை ஒழிப்பதற்கும், வேலைவாய்ப்பு வழங்குவதற்கும், 'யாரும் விடுபடவில்லை' என்ற உன்னத குறிக்கோளுடன் மகளிர் மேம்பாட்டில் கவனம் செலுத்துகிறது.

# 2. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் (TNCDW)

## 2.1 தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வரலாறு

தமிழ்நாடு அரசு, பெண்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்ற ஒரு தனி நிறுவனத்தை 1983–ஆம் ஆண்டு டிசம்பர் 9 – அன்று தொடங்கியதன் மூலம் ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இந்நிறுவனமானது, இந்திய கம்பெனிகள்(நிறுவனம்) சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நிறுவப்பட்டதின் முதன்மை நோக்கமானது மகளிரின் சமூக பொருளாதார முன்னேற்றம், மகளிருக்கு உகந்த தொழில்களை கண்டறிதல், தயாரிக்கும் பொருட்களை சந்தைபடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பயிற்சி மற்றும் கடன் வசதிகளுடன் பெண்களை

ஊக்குவித்து சுய உதவிக் குழுக்களை உருவாக்குவதே ஆகும்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்பது ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள ஏழைகள், விளிம்புநிலை மற்றும் நலிவடைந்தவர்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார திட்டங்களை செயல்படுத்தும் ஒரு நிறுவனமாகும்.

இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு 2006–ம் ஆண்டு வரை சமூக நலத் துறையின் கீழ் செயல்பட்டு வந்தது. அடித்தட்டு அளவிலான ஊராட்சி நிறுவன அமைப்புகளின் பயனுள்ள ஒருங்கிணைப்புடன் மகளிருக்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்கு ஏதுவாக ஜுலை 2006–ஆம் ஆண்டு முதல் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

பிணைப்பு, நம்பிக்கை மற்றும் தற்சார்பு போன்ற உணர்வுகளை சமுதாயம் சார்ந்த அமைப்புகளான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் மூலம் ஒட்டுமொத்த பெண்களின் வளர்ச்சிக்காக சுயஉதவிக் குழுக்களை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது வலுப்படுத்தி வருகிறது.

## 2.2 நிறுவன அமைப்பு

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், இந்திய நிறுவனச் சட்டம், 2013–ன் கீழ் பதிவு செய்யப்பட்டு, இந்நிறுவனத்தின் தலைவராக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் உள்ளார். இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை முன்னெடுக்க மேலாண்மை இயக்குநரும், அவருக்கு உறுதுணையாக செயல் இயக்குநர், மேலும் ஒவ்வொரு கருப்பொருட்களுக்கு

தலைவர்களாக கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், நிறுவன பணியாளர்கள் மற்றும் திட்டப் பணியாளர்கள் ஆகியோர் மாநில இயக்க மேலாண்மை அலகில் உள்ளனர். மேலும், திறன் வளர்ப்பு, சமூக மற்றும் நிறுவன கட்டமைப்பு, கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு, நிதி உள்ளாக்கம், வாழ்வாதாரம் மற்றும் தொழில் மேம்பாடு போன்ற கருப்பொருட்களுக்கான வல்லுநர்கள் ஆலோசகர்களாக செயல்படுகிறார்கள்.

மாவட்ட அளவில், இணை இயக்குநர் நிலையில் உள்ள திட்ட இயக்குநரின் (TNSRLM) தலைமையின் கீழ் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு செயல்படுகிறது. மாவட்டத்தில் கள அளவிலான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து நிறைவேற்றுவதற்கு திட்ட இயக்குநரின் கீழ் ஒவ்வொரு கருப்பொருளுக்கும் உதவி திட்ட அலுவலர்கள் செயல்படுகிறார்கள்.

ஊரகப் பகுதிகளில், வட்டார அளவில் உள்ள வட்டார இயக்க மேலாண்மை அலகில் திட்ட செயல்பாட்டினை வட்டார மேலாளர் வழி நடத்துகிறார். திட்ட செயலாக்கத்தின் ஒவ்வொரு கருப்பொருளுக்கும் ஒரு வட்டார ஒருங்கிணைப்பாளர் செயல்படுகிறார். அதேபோல், நகர்ப்புறங்களில், திட்டக்கூறுகளை செயல்படுத்துவதற்கு, 3,000 ஏழை குடும்பங்களை உள்ளடக்கிய பகுதிகளுக்கு ஒரு சமுதாய ஒருங்கிணைப்பாளர் வீதம் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

கிராம ஊராட்சி அளவில், கள நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் (CST), சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் (CBC), சமுதாய வளப் பயிற்றுநர்கள் (CRP) பண்ணை மற்றும் பண்ணை சாரா, சமுதாய வளப்பயிற்றுநர்கள் (CRP) (கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு) மற்றும்

சமுதாய வல்லுநர்கள் (CP–வேலைவாய்ப்பு) போன்ற சமுதாய வளப் பயிற்றுநர்கள் உள்ளனர். இதேபோன்று, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், ஒவ்வொரு 600 இலக்கு ஏழை குடும்பங்களுக்கும் ஒரு சமுதாய வளப் பயிற்றுநர் (CRP) உள்ளார்.

# 3. சுய உதவிக் குழு இயக்கம் மற்றும் மகளிர் திட்டம்

## 3.1 பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) திட்டம்

1980–ஆம் ஆண்டிற்கு முன்பு உள்ள ஊரக வளர்ச்சி திட்டங்கள் பெண்களை குறிப்பிட்ட இலக்காக கொண்டு செயல்படுத்தப்படவில்லை. அதன் பின்பு முதல் முறையாக ஊரகப் பகுதிகளில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டிற்கு மகளிர் குழுக்கள் மூலமாக நிதி உதவிகள் வழங்கி அவர்களை முன்னேற்றுவதில் கவனம் செலுத்தப்பட்டது. இருப்பினும், பொருளாதார முன்னேற்றத்திற்கும், சமூக வளர்ச்சிக்குமான எவ்வித பிணைப்பும் இல்லாததால் பெண்களுக்கான பொருளாதார மேம்பாட்டையும் கடந்து ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான அணுகுமுறையின் அடிப்படையில் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி (IFAD) திட்டம் உருவானது.

அரசு திட்டங்களில் மகளிரின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மட்டுமல்லாமல் அவர்களின்

ஒட்டுமொத்த வளர்ச்சியில் கவனம் செலுத்தும் புதிய அணுகுமுறையை செயல்படுத்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது (DeW) பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி (IFAD) திட்டத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டது.

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி உதவியுடன் சுய உதவிக் குழுக்கள் மூலம் சனநாயக, சமத்துவ, சமுதாய அமைப்பு போன்றவை வளர்ச்சிக்கான மாற்று அணுகுமுறையாக மேற்கொள்ளப்பட்டது. ஆரம்ப காலகட்டத்தில் இத்திட்டம் விவசாயம் மற்றும் நில மேம்பாட்டு திட்டமாக செயல்படுத்தப்பட்டு, பின்னர், இது அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி வளர்ப்பதன் மூலம் மகளிரின் பொருளாதார மேம்பாட்டிற்கான இயக்கமாக உருவானது.

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியின் முன்னோடி திட்டமாக சுய உதவிக்குழு இயக்கத்திற்கான விதை தருமபுரி மாவட்டத்தில் உள்ள இரண்டு வட்டாரங்களில் 1989–ம் ஆண்டில் விதைக்கப்பட்டது. பின்னர் சேலம் மற்றும் அப்போதைய தென்னாற்காடு மாவட்டங்களுக்கு 1992–ம் ஆண்டிலும், மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு 1993–ம் ஆண்டும் விரிவுபடுத்தப்பட்டது. தமிழ்நாடு அரசு துறையின் அங்கமான தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் திட்டங்களின் மூலம் "மகளிர் திட்டம்" என அறியப்பட்டது இந்த இயக்கத்திற்கு மேலும் உத்வேகம் அளித்தது.

அடுத்த 9 ஆண்டுகளில் 5,207 சுய உதவிக் குழுக்களில் உள்ள 1,20,960 மகளிருக்கு 80 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டது. மேற்கண்ட இத்திட்டமானது, 31.12.1998 அன்று அதிகாரப்பூர்வமாக முடிவடைந்த போதிலும் இதன்

மூலம் உருவான சுய உதவிக் குழு இயக்கத்தின் வாயிலாக வேளாண் நிலங்கள் மேம்படுத்தப்பட்டு வேளாண்மை பொருளாதாரம் உயர்ந்ததுடன் தமிழ்நாட்டில் மகளிரின் பொருளாதாரமும் உயர்த்தப்பட்டது.

### 3.2 மகளிர் திட்டம்

பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) திட்டத்தின் வெற்றியானது, மாநிலம் முழுவதும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை மற்றும் மிக பின்தங்கிய மகளிரிடம் சுய உதவிக் குழுக்கள் மூலம் சென்றடைவதற்கு அடித்தளமிட்டது. முன்னாள் முதலமைச்சர் டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் தொலைநோக்கு பார்வையின் அடிப்படையில் 1997–ம் ஆண்டு இத்திட்டமானது மாநிலம் முழுவதும், மாநில அரசின் முழு நிதியுதவியுடன் "மகளிர் திட்டம்" என்ற பெயரில் துவங்கப்பட்டது. இத்திட்டமானது படிப்படியாக அனைத்து

மாவட்டங்களின் ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டது. சென்னை மாவட்டமானது, 2000–ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டது.

மகளிர் திட்டமானது, அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுடன் இணைந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் புதிய சுய உதவிக் குழுக்களை உருவாக்கி இவர்களுக்கு தேவையான பயிற்சிகள் வழங்குதல், சேமிப்புகளை உயர்த்துதல் மற்றும் வங்கி கடன்கள் பெறுதல் போன்றவற்றின் மூலம் சமூக பொருளாதார தடைகள் நீக்கப்பட்டு சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு மாபெரும் சக்தியாக செயல்படுகிறார்கள்.

தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களில் சுய உதவிக் குழு இயக்கம் பத்தாண்டுகளுக்கு மேலாக வெற்றிகரமாக செயல்பட்டதின்

அடிப்படையில் ஊரக வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டு 1999–ஆம் ஆண்டு ஒன்றிய அரசு ஸ்வர்ணஜெயந்தி கிராம் ஸ்வரோஸ்கர் யோஜனா (SGSY) என்ற புதிய திட்டத்தை நாடு முழுவதும் அறிமுகப்படுத்தியது.

மாநிலத்தில் சுய உதவிக் குழு இயக்கத்தை தொடர்ந்து ஊக்கப்படுத்துவதன் வாயிலாக தற்போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ், மொத்தம் 4.73 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

# 4. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் வாழ்வாதார இயக்கங்கள்

**4. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் வாழ்வாதார இயக்கங்கள்**

ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் வறுமை ஒழிப்பினை முதன்மை நோக்கமாக கொண்டு ஒருங்கிணைந்த சமூக பொருளாதார முன்னேற்றத்தை உறுதிபடுத்தும் நோக்கில் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது, மகளிருக்கான சமூக – பொருளாதார மற்றும் அரசியல் பங்களிப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் மகளிருக்கான பல்வேறு வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார திட்டங்களை செயல்படுத்தப்படுவதன் மூலம் இவை சாத்தியமாகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் :

i) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)
ii) தேசிய ஊரகப் பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம் (NRETP)

iii) தீன் தயாள் உபாத்தியாய கிராமப்புறத் திறன் பயிற்சித் திட்டம் (DDU–GKY)

iv) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (TNULM)

## 4.1 தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)

தமிழ்நாடு அரசானது, ஒன்றிய அரசின் தீன்தயாள் அந்தியோதயா யோஜனா – தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தை (DAY–NRLM) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமாக ஒன்றிய மற்றும் மாநில அரசின் 60:40 என்ற நிதி பகிர்வு அடிப்படையில் 2012–13–ம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. ஊரகப்பகுதிகளில் ஏழைகளைக் கொண்டு வலுவான மற்றும் துடிப்பான மக்கள் அமைப்புகளுக்கான அடித்தளத்தை உருவாக்கும் பொருட்டு, வறுமை ஒழிப்பு திட்டங்களை செயல்படுத்தி இத்திட்டத்தின் மூலம் வாழ்வாதார முன்னெடுப்புகள், வங்கி கடன் இணைப்பு மற்றும் நிதி சார்ந்த பிற சேவைகளை பெறுவதற்கான

வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டு அக்குடும்பங்களின் வருமானம் உயர்த்தப்படுகிறது. சமூகத்தில் உள்ள ஏழை மற்றும் விளிம்புநிலையில் உள்ளவர்களை இலக்கு மக்களாக கொண்டு நிலையான வாழ்வாதார வாய்ப்புகள் வழங்க சமூக அடிப்படையிலான அமைப்புகளாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர்.

## 4.2 தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் (NRETP)

தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் உலக வங்கி உதவியுடன் ஒன்றிய அரசால் வாழ்வாதாரம் மற்றும் தொழில் ஊக்குவிப்பு நடவடிக்கையை மேம்படுத்த 5 மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட 20 வட்டாரங்களில் முன்மாதிரியான முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்பட்டது. பண்ணை மற்றும் பண்ணை சாரா பொருட்களுக்கு

சாத்தியமான நிறுவனத்தை உருவாக்குவதன் மூலம் கிராமப்புற மகளிர் புதிய பொருளாதார முயற்சிகளுக்கு மாற இத்திட்டம் உதவும். பெண்களுக்கான மற்றும் மகளிர் தலைமையிலான பண்ணை மற்றும் பண்ணை சாரா நிறுவனங்களை ஊக்குவித்து, வணிகங்களை உருவாக்க உதவி செய்து அதன் மூலம் நிதி நிறுவனங்களை அணுகவும், சந்தைப்படுத்துதல் மற்றும் கூட்டமைப்புகளுடன் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி பங்களிப்புடன் 2019–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டமானது 30.06.2024ல் நிறைவடையவுள்ளது.

## 4.3 தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU–GKY)

தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU – GKY) ஒன்றிய மற்றும் மாநில அரசு, 60:40 என்ற நிதி பகிர்வு முறையை கொண்ட வேலை வாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி திட்டமாகும். இத்திட்டமானது, கிராமப்புற வேலையற்ற இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து NSQF சான்றிதழுடன் கூடிய குறைந்தபட்சம் 70% பணியமர்வு அளிக்கப்படுவதை உறுதி செய்கிறது. இத்திட்டமானது ஏழைகள் மற்றும் விளிம்பு நிலையில் உள்ளவர்கள் பயனடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 4.4 தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (TNULM)

நகர்ப்புற ஏழைகளைக் கொண்டு வலுவான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி திறன் பயிற்சி வழங்குதல், நுகர்வு மற்றும் தொழில் நிறுவனம் அமைக்க வட்டி மானியத்துடன் கூடிய

கடன் இணைப்பு பெற வழிவகை செய்வதின் மூலமாக அவர்களின் வறுமை மற்றும் நலிவு நிலையை குறைப்பதே தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமாகும். இத்திட்டம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது.

# 5. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் உள்ள சங்கங்கள்

## 5. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் உள்ள சங்கங்கள்

### 5.1 தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC)

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) 2001 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த மையம், தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975–ன் கீழ் பதிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஓர் அங்கமாகச் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தின் முக்கிய நோக்கமானது, திட்டப் பணியாளர்கள், சமுதாயம் சார்ந்த அமைப்புகள் மற்றும் மாநில / மாவட்ட / வட்டார அளவிலான வளப் பயிற்றுநர்கள் போன்ற பங்குதாரர்கள் உள்ளிட்டோர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி வழங்குதல், பயிற்சி உபகரணங்கள், கையேடுகள், வழிகாட்டி புத்தகங்கள் போன்ற பயிற்சி சார்ந்த புத்தகங்கள் மற்றும் கையேடுகளை உருவாக்குவதாகும்.

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையமானது, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பல்வேறு கருப்பொருள் சார்ந்த கூறுகளில், மாநில வளப் பயிற்றுநர்கள், மாவட்ட வளப் பயிற்றுநர்கள், மற்றும் வட்டார வளப் பயிற்றுநர்களை தேர்வு செய்வதில் ஈடுபட்டு வருகிறது. மேலும், இந்நிறுவனமானது, சுய உதவிக் குழுக்களுக்கான புத்தாக்க பயிற்சிக் கையேடு, சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கான பயிற்சிக் கையேடு, வங்கியாளர்களுக்கான பயிற்சிக் கையேடு, நிறங்கள்– மாதவிடாய் சுகாதார மேலாண்மை (MHM), உணவு ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் (FNHW) போன்ற பல்வேறு பயிற்சிக் கையேடுகளை உருவாக்கியுள்ளது.

2024–25– ஆண்டில், தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையமானது, மக்கள்

கற்றல் மையம் (MaKaMai) / சமுதாய மேலாண்மை பயிற்சி மையங்களை (CMTC) தர மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளது.

## 5.2 முற்றம் மாத இதழ்

மகளிருக்கு தேவையான பயனுள்ள செய்திகள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த விபரங்களைத் தெரிவிக்கும் பொருட்டு தகவல், கல்வி மற்றும் தொடர்பு சாதனமாக செயல்பட ஓர் மாத இதழ் தேவைப்பட்டது. அதன் விளைவாக முற்றம் சங்கம் 1998-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு சங்கங்கள் பதிவு சட்டம் 1975-ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. முற்றம் மாத இதழ் 25 ஆண்டுகளுக்கு மேலாக மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது.

தற்போது முற்றம் மாத இதழ், நவீனப்படுத்தப்பட்டு தமிழ்நாடு முழுவதும் சந்தா செலுத்திய 1,30,000 மகளிர் சுய உதவிக்

குழுக்களுக்கு அனுப்பப்படுவதன் மூலம் 22 இலட்சம் உறுப்பினர்களைச் சென்றடைகிறது. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், புதிய திட்டங்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகள் தொடர்பான பல்வேறு செய்திகள் மற்றும் சுய உதவி குழுக்களின் வெற்றி கதைகளை இவ்விதழ் வெளியிட்டு வருகிறது.

மகளிர் முன்னேற்றம் குறித்த செயல்பாடுகள் மற்றும் மகளிருக்கான அனைத்து திட்டங்கள் தொடர்பான விபரங்களை சேகரித்து, அதை அனைத்துத் தரப்பினருக்கும் சென்றடையும் விதமாக முற்றம் இதழில் பதிவிட்டு வெளியிடச் செய்வதே இதன் முக்கிய குறிக்கோள் ஆகும். ஊரக மற்றும் நகர்புறப் பகுதிகளில் செயல்படும் மகளிர் சுய உதவிக்

குழுக்களின் உன்னத வெற்றிக் கதைகள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் போன்றவற்றின் சாதனைகள் மற்றும் மகளிர் முன்னேற்றத்திற்கான கட்டுரைகள் போன்றவை முற்றம் மாத இதழ்களில் வெளியிடப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு துறைகளின் திட்டங்கள், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் பெண்களுக்கான உரிமைகள், பெண் கல்வி, மகளிர் பாதுகாப்பு சட்டங்கள், வறுமை ஒழிப்பு செயல்பாடுகள், சேமிப்பின் முக்கியத்துவம், பெண் தொழில் முனைவோர் முன்னேற்ற செயல்பாடுகள், கூட்டுத் தொழில் நடவடிக்கைகள், இயற்கை வேளாண்மை, உடல் நலம் மற்றும் கைதேர்ந்த மருத்துவக் குறிப்புகள், உணவு, ஊட்டச்சத்து, சுகாதாரம், பாலின சமத்துவம், தன் சுத்தம் குறித்த ஆலோசனைகள்,

மாற்றுத் திறனாளிகளின் செயல்பாடுகள் மற்றும் மனநலம் சார்ந்த பயிற்சிகள் போன்ற தகவல்கள் இடம் பெற்று மிளிர்கின்றன.

## 5.3 தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் சந்தைப்படுத்தல் சங்கம் – (TNSSMS)

மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்தி பொருட்களை மேம்படுத்தவும், சந்தைப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பல்வேறு நிறுவனங்களில் மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கமும் ஒன்றாகும். இச்சங்கம் மகளிர் சுய உதவிக்குழு உற்பத்தி பொருட்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்த தேவையான முந்தைய மற்றும் பிந்தைய தொழில் உதவிகளை செய்து வருகிறது.

தேசிய கண்காட்சி மற்றும் பிற துறை கண்காட்சிகளுக்கு சுய உதவிக்குழு உறுப்பினர்களை பங்கேற்க செய்தல் மற்றும் மாநில அளவில் கண்காட்சிகள் நடத்துதல்

போன்ற பணிகளை செய்கிறது. இச்சங்கத்தின் கீழ் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கமானது சந்தைப்படுத்துதலுக்காக உருவாக்கப்பட்ட சந்தை வாய்ப்புகளை கண்காணித்து வருகிறது.

மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் சுய உதவிக்குழுக்களுக்கு தங்களது பொருட்களை மதிப்பு கூட்டுதல் மற்றும் பேக்கேஜிங் போன்ற செயல்பாடுகளுக்கு உறுதுணையாக உள்ளது. இது தவிர விலை நிர்ணயம், தரத்தை உறுதி செய்தல், இணைய கட்டணம் மற்றும் இணைய பரிவர்த்தனையில் உள்ள முறைகேடுகள் போன்றவற்றுக்கு அறிவுரைகள் வழங்குதல் போன்ற பணிகளோடு மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்தி பொருட்களை மேம்படுத்தி விற்பனை செய்யும் பணியினை மேற்கொள்கிறது.

# 6. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)

## 6. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)

2012ஆம் ஆண்டில், ஒன்றிய அரசின் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய நோக்கமானது, ஏழைக் குடும்பங்களுக்கு சுய வேலைவாய்ப்புகள் மற்றும் திறன் சார்ந்த வேலைவாய்ப்புகளை வழங்கி அத்துடன் வாழ்வாதார மேம்பாடு நடவடிக்கைகள், நிதி உதவிகள் வழங்குதல் மற்றும் பிற சேவைகளை அளிப்பதன் மூலம் வறுமையைக் குறைப்பதே ஆகும். நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதற்காக ஏழைகளின் சமுதாயம் சார்ந்த அமைப்புகளை வலுவான மற்றும் துடிப்பான நிறுவன அமைப்புகளாக மாற்றுவதன் மூலம் இது சாத்தியமாகிறது.

## 6.1 நிறுவன கட்டமைப்பு மற்றும் திறன் மேம்பாடு

### சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன கட்டமைப்பு

சமூக ஒருங்கிணைப்பின் வாயிலாக 18 முதல் 60 வயதுக்குட்பட்ட 12 முதல் 20 வரை இலக்கு மக்களை கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகிறது, சுய உதவிக்குழுக்கள் தொடர் கூட்டங்களை நடத்துவதற்கும் சேமிப்பை மேம்படுத்துவதற்கும் அதன் உறுப்பினர்களிடையே உள் கடன்களை நடைமுறைப்படுத்துவதற்கும், கூட்டு மற்றும் ஜனநாயக முறைப்படி செயல்படவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

### சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் மிகவும் ஏழை, ஏழை, மாற்றுதிறனாளிகள், நலிவுற்றோர், பழங்குடியினர் மற்றும் விளிம்பு

நிலையிலுள்ள மக்கள் அனைவரையும் மக்கள் பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வு மூலம் ஏழைகள் அடையாளம் காணப்பட்டு, விடுபட்ட ஏழைக் குடும்பங்களிலுள்ள மகளிரை சுய உதவிக் குழுக்களில் இணைக்கப்படுகின்றனர்.

சுய உதவிக் குழுக்களின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கு கூட்டாக முடிவெடுத்தல் மற்றும் பொருளாதார மேம்பட்டிற்கான வங்கி கடன் இணைப்பு பெறுதல் உள்ளிட்ட நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

2023–24–ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 13,508 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைப்பட்டுள்ளன.

**மகளிர் சுய உதவிக்குழுக்கள் உருவாக்குவதில் தன்னிறைவு** :

தமிழ்நாட்டில் 2005 முதல் 2014 வரை இலக்கு மக்கள் குடும்பங்கள் மக்கள் நிலை

ஆய்வு (PIP) செயல்முறை மூலம் பல்வேறு கட்டங்களில் அடையாளம் காணப்பட்டனர்.

இந்த அரசு 2022–ம் ஆண்டில் மக்கள் நிலை ஆய்வு பட்டியலில் உள்ள வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களை, கோவிட்–19 தொற்றுநோய் பாதிப்பின் தொடர்ச்சியாக புதுப்பித்திட முடிவெடுக்கப்பட்டது. தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கமானது மக்கள் நிலை ஆய்வு பட்டியலில் உள்ள இறப்பு மற்றும் இடம்பெயர்வு அடிப்படையில் புதுப்பித்துள்ளது. மேலும், புதுப்பிக்கப்பட்ட பட்டியல் அக்டோபர் 2022–ல் நடைபெற்ற கிராம சபையில் வைத்து ஒப்புதல் பெறப்பட்டது. இதன்மூலம் தகுதியான குடும்பங்கள் இலக்கு மக்கள் பட்டியலில் இணைக்கப்பட்டது. இந்த செயல்முறை மூலம் தகுதியான 31.87 லட்சம் குடும்பங்கள் கண்டறியப்பட்டு, விடுப்பட்ட ஏழை மக்களை

கொண்டு சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டது.

இதனால், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சுய உதவிக்குழுக்கள் அமைப்பதில் 100% தன்னிறைவு பெற்றுள்ளது.

**சமுதாயம் சார்ந்த அமைப்புகள்**

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு (PLF)**

அனைத்து கிராம ஊராட்சிகளில் உள்ள சுய உதவிக்குழுக்களும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் இணைக்கப்படுகிறது . இது தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. கிராமங்களில் உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைக்கப்படுவதற்கான நடவடிக்கைகைள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, நிறுவன

கட்டமைப்பு வழங்கப்படுகிறது. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மாவட்ட இயக்க மேலாண்மை அலகிற்கும், சுய உதவி குழுவிற்கும் இடையே இணைப்பு பாலமாக செயல்படுகிறது. கூட்டமைப்புகளை வலுப்படுத்திட அரசாணை (நிலை) எண்.125, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை (ம.அ.தி–3) நாள்: 21.07.2008 வெளியிடப்பட்டது. இவ்வரசாணையின் படி, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பல்வேறு திறன் வளர்ப்பு பயிற்சிகள் மற்றும் பல்வேறு திட்டங்களை கையாளுவதற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்**

- கிராமத்தில் உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களும் கூட்டமைப்பில் இணைவதை உறுதி செய்தல்.
- மக்கள் நிலை ஆய்வின் மூலம் அடையாளம் காணப்பட்ட அனைத்து தகுதியான

மகளிரையும் சுய உதவிக்குழுக்களில் இணைத்தல்.

- ஜனநாயக முறைப்படி பொறுப்பாளர்களை தேர்வுசெய்தல்.
- சுய உதவிக்குழுக்கள் தங்கள் திறனை வளர்த்து கொள்ள உதவுதல்.
- சுய உதவிக் குழுக்களின் பதிவேடுகள் பராமரித்தலை கண்காணித்தல்.
- அனைத்து சுய உதவிக் குழுக்களிலும் தயாரிக்கப்படும் நுண் கடன் திட்டம் தயாரிப்பதை உறுதி செய்தல்.
- சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் சுழல் நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதிகளின் பயன்பாட்டினை கண்காணித்தல்.
- முறையான உள் மற்றும் வெளி கடனை திருப்பிச் செலுத்துவதை உறுதி செய்தல்.
- அரசின் பல்வேறு திட்டங்களைப் பற்றிய தகவல்களைப் பரிமாறுதல்.
- சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான நிதிசார்ந்த இணைப்பு நிறுவனமாக செயல்படுதல்.

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் துணைக்குழுக்கள்**

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் துணைக் குழுக்கள் பின்வரும் நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டுள்ளது.

1. சுய உதவிக்குழுக்கள் உருவாக்கம் மற்றும் வலுப்படுத்துதல்
2. கடன் இணைப்பு மற்றும் கண்காணிப்பு
3. வாழ்வாதார மேம்பாடு
4. சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சமுதாய உறுப்பினர்களின் வாழ்வதார முன்னேற்றத்திற்கு இத்துணைக் குழுக்கள் உதவுகின்றன.

**சமூக தணிக்கை குழு (SAC)**

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் (PLF) செயல்பாடுகளை கண்காணிக்க பொதுக்குழு (PLF – GB) ஆல் சமூக தணிக்கை குழு ஆனது அமைக்கப்படுகிறது. சமூக தணிக்கைக் குழுவிலுள்ள, 5 உறுப்பினர்களும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு

பொறுப்பாளர்கள் அல்லது குடியிருப்பு அளவிலான மன்றம் ஆகியவற்றின் பொறுப்பாளர்கள் இல்லாத சுய உதவிக்குழு உறுப்பினர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்தக் குழு கண்டறிந்த பரிந்துரைகள் போன்றவற்றை அவ்வப்போது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பொதுக்குழுவிற்கு (GB) சமர்ப்பிக்கிறது.

**கிராம வறுமை ஒழிப்பு சங்கம் அமைத்தல் (VPRC)**

கிராம வறுமைக் ஒழிப்பு சங்கமானது மிகவும் ஏழை, ஏழை, மாற்றுத் திறனாளிகள் மற்றும் பழங்குடியின மக்கள் போன்ற இலக்கு மக்களை உள்ளடக்கிய 11 முதல் 19 வரையிலான உறுப்பினர்களைக் கொண்டது. இலக்கு மக்களை அடையாளம் காணவும், அவர்களை வறுமையிலிருந்து மீட்பதற்கும், அவர்களின்

பாதிப்புகளைக் குறைப்பதற்கும் நலிவுநிலை குறைப்பு நிதியிலிருந்து தனிநபர் கடன்களை வழங்கி வருகிறது.

**வட்டார அளவிலான கூட்டமைப்புகள்** (BLF)

வட்டார அளவிலான கூட்டமைப்புகள் ஒவ்வொரு வட்டாரங்களிலுள்ள அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பிரதிநிதிகளை கொண்டு உருவாக்கப்படுகிறது. தமிழகத்தில் உள்ள 388 வட்டாரங்களிலும் வட்டார அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன.

**வட்டார அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகள்** :

1. சமுதாய அமைப்புகளுக்கு சாத்தியமான மற்றும் நிலையான வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளை அடையாளம் காணுதல்.
2. கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்துவதை உறுதி செய்தல்.

3. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு எளிதாக வங்கிக் கடனை பெறுவதை உறுதி செய்தல்.
4. சமூக உள்ளாக்கம், பாலினம், உரிமைகள் மற்றும் உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் (FNHW) உள்ளிட்ட சமூகப் பிரச்சினைகளைத் தீர்வு காண்பதை உறுதி செய்தல்.
5. சமுதாய வள பயிற்றுநர்களின் (CRPs) சேவைகளைப் பயன்படுத்தி அனைத்து திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் நடத்துவதற்கான வட்டார அளவிலான பயிற்சி மையமாக செயல்படுகிறது.

**திறன் வளர்ப்பு**

திறன் மேம்பாடு சமூக வளர்ச்சிக்கு முக்கியமானது. மேலும் சுய உதவிக் குழு மற்றும் கூட்டமைப்பு உறுப்பினர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான நிலையான முயற்சிகள் மூலம் அடையப்படுகிறது.

## சமுதாயம் சார்ந்த நிறுவனங்களின் திறனை வளர்த்தல்

சமுதாயம் சார்ந்த அமைப்புகள் மற்றும் அனைத்து நிலையிலான திட்ட பணியாளர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி வழங்கப்படுகிறது. சமுதாயம் சார்ந்த அமைப்புக்களான சுய உதவிக் குழு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, வட்டார அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் மகமை ஆகியவற்றிற்கு திட்ட குறிக்கோளை அடைவதற்காக தேவையான பயிற்சிகள் வழங்கப்படுகிறது. சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கான பயிற்சிகளில் ஆளுமை மற்றும் நிதி மேலாண்மை முதன்மையான பயிற்சியாக வழங்கப்படுகிறது.

சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது:

- புதிதாக உருவாக்கப்பட்ட சுய உதவிக்குழுவின் உறுப்பினர்களுக்கான பயிற்சி.

- சுய உதவி குழுக்களின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சி.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் அலுவலக நிர்வாகிகளுக்கும் ஆளுமை மற்றும் நிதி மேலாண்மை குறித்த பயிற்சி.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயற்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி.
- வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கான பயிற்சி.
- தரமதிப்பீட்டில் பின்தங்கிய சமுதாயம் சார்ந்த அமைப்புகளை மேம்படுத்துவதற்கான பயிற்சி.
- அனைத்து சுய உதவிக்குழுக்களுக்கும் மற்றும் குழு உறுப்பினர்களுக்குமான புத்தாக்கப் பயிற்சி.
- சுய உதவி குழுக்கள். கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் கணக்காளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி.

**புத்தாக்க பயிற்சி**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் 2023–24 ஆம் ஆண்டில் அனைத்து சுய உதவிக்குழுக்களின் ஊக்குநர் மற்றும் **பிரதிநிதிகளுக்கு** அனைத்து கூறுகளிலும் ஒரு நாள் புத்தாக்க பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 388 வட்டார வள பயிற்றுநர்களை கொண்டு 21,218 அணிகளாக (BATCHES) 3,18,000 சுய உதவிக் குழுக்களின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கு புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. முதன்முறையாக, மதிகளம் என்ற இணையதளம் மூலம் இப்பயிற்சிகள் கண்காணிக்கப்பட்டது.

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சமுதாய பணியாளர்கள்**

சமூக மூலதனம் என்பது எந்தவொரு சமூக மேம்பாட்டுத் திட்டத்திற்கும் மிகப்பெரிய சொத்துக்களில் ஒன்றாக அமைந்துள்ளது. பல்வேறு வகையான திட்ட செயல்பாடுகளை

மாநில, மாவட்ட, வட்டார மற்றும் கிராம அளவில் நடைமுறைப்படுத்தவும் கண்காணிக்கவும் வள பயிற்றுநர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். கிராம ஊராட்சிகளில் சமுதாய பணியாளர்கள் விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை எண் . 1**

| **வ. எண்** | **கருப்பொருள்கள்** | **சமுதாய பணியாளர்கள்** |
|---|---|---|
| 1 | நிறுவன கட்டமைப்பு மற்றும் திறன் வளர்ப்பு | சமுதாய சுய உதவிக்குழு பயிற்றுநர்கள்(CST) |
| 2 | நிதி உள்ளாக்கம் | சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் (CBC) |
| 3 | வாழ்வாதார மேம்பாடு | சமுதாய வளப் பயிற்றுநர் – பண்ணை |
| | | சமுதாய வளப் பயிற்றுநர் – பண்ணை சாரா |
| 4 | கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு | சமுதாய வளப் பயிற்றுநர்(கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு) |
| 5 | திறன் பயிற்சி | சமூக வல்லுநர்கள் (வேலைவாய்ப்பு) |

**மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு:**

மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பின் நோக்கமானது கிராமப் புறங்களிலுள்ள சுய உதவி குழு உறுப்பினர்களின் வறுமையை குறைப்பதே ஆகும். இம்மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்புக்கள் சுய உதவி குழுக்கள் மற்றும் அவற்றின் கூட்டமைப்புகள் நீடித்த நிலைத்த தன்மை பெறுவதற்கு உறுப்பினர்களுக்கு சொந்தமான, உறுப்பினர்களே நிர்வகிக்கும் மற்றும் நிதி தன்னிறைவுப் பெற்ற சுய உதவி குழு மற்றும் கூட்டமைப்பாக உருவாக்கப்படுகிறது.

**நோக்கங்கள்:**

- நிதி சார்பு பெறுவதற்கு கூட்டமைப்பை ஊக்குவித்தல்.
- சுய உதவிக்குழு கூட்டமைப்புகளை செயல்விளக்க தளங்களாக உருவாக்குதல்.

- இது ஒரு உயர்நிலை பயிற்சி மையமாக திகழ்ந்து மற்ற வட்டார கூட்டமைப்புகளுக்கு ஒரு முன் மாதிரியாக திகழ செய்தல்.
- சமூக மூலதனத்தை மேம்படுத்துதல்.
- சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் பயிற்சி தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வள மையமாக திகழ செய்தல்.

**தொலை நோக்கு பார்வையை உருவாக்குதல் பயிற்சி (VBE)**

வட்டார **மாதிரி** அளவிலான கூட்டமைப்பானது, சுய சார்புடைய நிறுவனமாக உருவாக்குவதற்கு, தொலை நோக்கு பார்வை, ஆண்டு செயல் திட்டம், தொழில் வளர்ச்சித் திட்டம் போன்ற முக்கோண பரிமாணங்களை கொண்டு தயாரிக்கப்படுகிறது.

தொலைநோக்கு பார்வை என்பது சுய உதவி குழு உறுப்பினர்களின் கனவுகள், குடும்பம் மற்றும் கிராம ரீதியான தேவைகள் என பல கோணங்களை உள்ளடக்கியது.

ஆண்டு செயல் திட்டம் என்பது குறிப்பிட்ட கால அளவுகளை கொண்ட திட்டமாகும். இவை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தொலைநோக்கு பார்வை திட்டத்தை அடைவதற்கு உருவாக்கப்படுகிறது.

தொழில் வளர்ச்சித் திட்டம் என்பது மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பை சுய சார்பு அடையச் செய்வதேயாகும்.

**மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பின் எதிர்பார்க்கப்படும் செயல்பாடுகள்**

- மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு செயல்முறையின் படி நிலையான சேவையை வழங்கும்.
- இவை தகுதியான நலிந்தோரை சுய உதவி குழுக்களில் இணைத்து அவர்களுக்கான பயன்கள் மற்றும் சேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்குதல்.
- மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்புகளில் 5% விட குறைவான ஏற்று கொள்ளபட வேண்டிய அளவு (PAR) இருத்தல் அவசியம் (>30 நாட்கள்).

- இவை சட்டபூர்வ தேவைகளை தவறாமல் நிறைவேற்றும்.
- உயரிய சமூக மூலதனம் மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்காக உருவாக்கப்படுகிறது.
- மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு திறன்பட செயல்பட அனைத்து திட்ட பணியாளர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

**மக்கள் கற்றல் மையம் /சமுதாயம் நிர்வகிக்கும் பயிற்சி மையம் (CMTC)**

மக்கள் கற்றல் மையமானது ஏற்கனவே 26 மாவட்டங்களில் வாழ்ந்து காட்டுவோம் என்ற திட்டத்தால் உருவாக்கப்பட்டது. இவை தமிழ்நாடு சங்கப்பதிவு சட்டம் 1975–ன் கீழ் பதியப்பட்டது. மக்கள் கற்றல் மையம் என்பது கிராமப்புறங்களிலுள்ள அனுபவம் வாய்ந்த சமுதாய வல்லுநர்களை கொண்டது. இவர்கள் ஏற்கனவே வறுமை குறைப்பு திட்ட செயல்பாடுகளை முறையாக செயல்படுத்திய அனுபவம்

கொண்டவர்கள். தற்பொழுது, இம் மையமானது சமுதாயம் நிர்வகிக்கும் பயிற்சி மையமாக உள்ளது. மேலும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கான அனைத்து வகையான திறன் வளர்ப்பு பயிற்சிகளையும் மேற்கொள்கிறது.

**சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நிதி உதவிகள்**

**(i) சுழல் நிதி**

குழு ஆரம்பிக்கப்பட்டு மூன்று மாதம் நிறைவடைந்து பின்னர் பயிற்சி பெற்று, தரமதிப்பீட்டிலும் தேர்ச்சி பெற்ற சுய உதவிக்குழுக்களுக்கு சுழல் நிதியாக குழு ஒன்றுக்கு ரூ.15,000/- வீதம் வழங்கப்படுகிறது. இச்சுழல் நிதியானது அவர்களை ஊக்குவிப்பதற்கு ஒரு காரணியாகவும், அவர்களின் சேமிப்போடு மூலதன நிதியை உயர்த்தி அதிகமான உறுப்பினர்கள் உள்கடன் பெறுவதற்கும் வங்கிக் கடன் பெறுவதற்கும் வழிவகை செய்கிறது.

2023–24 ஆம் ஆண்டில், 14,149 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.21.22 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

**சமுதாய முதலீட்டு நிதி (CIF)**

சமுதாய முதலீட்டு நிதி (CIF) ஆனது 6 மாதங்கள் நிறைவடைந்த சுய உதவிக்குழுக்களின் தேவைக்கேற்ப ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பால் பரிந்துரைக்கப்படும் குழுக்களுக்கு, பொருளாதார செயல்பாட்டிற்கு மட்டுமே கடனாக வழங்கப்படுகிறது. சமுதாய முதலீட்டு நிதியானது வாழ்வாதார செயல்பாடுகள் மேற்கொள்ளும் சுய உதவிக் குழுவிற்கு அவர்களின் முறையான கடன் திருப்பத்தை கருத்தில் கொண்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் வழங்கப்படுகிறது.

ஒரு சுய உதவிக் குழுவிற்கு அதிகபட்சமாக ரூ.1.50 இலட்சம் கடன்

தொகையாக அதிகபட்ச வட்டி (9%) விகிதத்தில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் வழங்கப்படுகிறது. சமுதாய முதலீட்டு நிதி திருப்பம் செலுத்தும் தொகையில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பரிந்துரை செய்யும் சுய உதவி குழுக்களின் தேவையின் அடிப்படையில் சுழற்சி முறையில் வழங்கப்படும்.

2022–23 – ஆம் ஆண்டு முதல் சமுதாய முதலீட்டு நிதி சுய உதவிக்குழுக்களுக்கு NRLM இணையதள வாயிலாக நிதி விடுவிப்பு முறையில் (FDM) வழங்கப்பட்டு வருகிறது. 2023–24 ஆம் ஆண்டில், 11,626 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.145.63 கோடி சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்பட்டுள்ளது.

**நலிவு நிலை குறைப்பு நிதி** (VRF)

நலிவு நிலை குறைப்பு நிதியானது (VRF), நலிந்தோர் மற்றும் மாற்றுதிறனாளிகளுக்கான

உணவு பாதுகாப்பு, வாழ்வாதார செயல்பாடுகள் மற்றும் எதிர்பாராத செலவினங்களுக்காக (உடல் நலக்குறைவு, இயற்கை பேரிடர், எதிர்பாரா மருத்துவ செலவு போன்றவை) குறைந்த வட்டி அதாவது, 6% வட்டி விகித்தில் கடன் தொகையாக ரூ.25,000/- ற்கு மிகாமல் கூட்டமைப்பு மூலம் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களால் வழங்கப்படும் மூலதன நிதியாகும்.

2023–24 ஆம் ஆண்டில், தமிழகத்தில் பெய்த வரலாறு காணாத கனமழை காரணமாக, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு ரூ.5.31 கோடி செலவில் 2,125 கிராம வறுமைக் ஒழிப்பு சங்கங்களில் உள்ள குழுக்களுக்கு நலிவு நிலை குறைப்பு நிதி வழங்கப்பட்டது.

### 6.2 நிதி உள்ளாக்கம் மற்றும் நுண் கடன் பெறுவதற்கான வழி முறை

நிதி உள்ளாக்கம் என்பது கிராமப்புற ஏழைகளுக்கு குறைந்த எளிய முறையில் நிதிச்

சேவைகளை வழங்குவதைக் குறிக்கிறது. சுய உதவிக் குழுக்களிடையே நிதி உள்ளாக்கத்தை ஊக்குவித்தல், வங்கிக் கடன் பெற வழிவகை செய்தல், அரசின் திட்டங்கள் மூலம் காப்பீடு மற்றும் ஓய்வூதிய சேவைகளை வழங்குதல் ஆகியவற்றை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது உறுதி செய்கிறது.

**நிதிசார் கல்வி**

நிதிசார் கல்வி என்பது சுய உதவிக்குழு உறுப்பினர்களின் குடும்பத்தினரிடையே நிதி சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், நிதிசார் திறனை வளர்ப்பதற்கும், பல்வேறு நிதி சேவைகளை எளிதில் அணுகுவதற்கும் வழிவகை செய்வதன் மூலம் தகவல் இடைவெளியைக் குறைப்பது முக்கியமான ஒன்றாகும். நிதிசார் கல்வியானது கீழ்க்கண்ட தலைப்புகளில் முன்னிலைப்படுத்தப்படுகிறது.

i) **நிதிசார் திட்டமிடல்**: வாழ்க்கை சுழற்சி நிகழ்வுகள், தேவைகள், விருப்பங்கள் போன்றவை.

ii) **சேமிப்பு**: எங்கு சேமிப்பது, எப்படி சேமிப்பது, தனிப்பட்ட வங்கி சேமிப்பு கணக்கை செயல்படுத்துதல், வங்கி சேமிப்பு கணக்கு மூலம் பண பரிவர்த்தனை மேற்கொள்ளுதல் போன்றவை.

iii) **கடன்:** வங்கிக் கடன் பெறுதல், அதன் பயன்பாடு, வாராக்கடன் பற்றிய விழிப்புணர்வு போன்றவை.

iv) **காப்பீட்டு கல்வியறிவைப் பரப்புதல்**: ஒன்றிய மற்றும் மாநில அரசின் பல்வேறு காப்பீடு திட்டங்களில் பதிவு செய்ய வசதிகளை ஏற்படுத்துதல்.

v) **ஓய்வூதியம்**: நீண்ட கால நிதி திட்டமிடலின் தேவை மற்றும் பல்வேறு ஓய்வூதிய திட்டங்கள் எளிதில் கிடைக்கச் செய்தல்.

vi) **மின்னணு நிதி சேவை**: பணமில்லா பரிவர்த்தனையை ஊக்குவித்தல் மற்றும் வங்கி வணிக தொடர்பாளர்கள் மூலம்

இருப்பிடம் அருகாமையில் நிதி சேவைகளை பெறுதல்.

சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு நிதிசார் கல்வியறிவை வழங்குவதற்கும் பல்வேறு நிதி சேவைகள் குறித்த கருத்துகளை விளக்குவதற்கும் 2023-24-ம் ஆண்டு வரை 2,886 நிதிசார் கல்வி சமுதாய வளப் பயிற்றுநர்களுக்கு (FLCRPs) பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு பிளிப் சார்ட்கள், பயிற்சியாளர்கள் கையேடு, அச்சிடப்பட்ட விளையாட்டு பொருட்கள் போன்றவற்றைக் கொண்ட தமிழிலான பயிற்சிக் கருவி பெட்டகம் (Kit) வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதிசார் கல்வி சமுதாய வளப் பயிற்றுநர்கள் (FLCRPs) 2023-24-ம் ஆண்டில் 24,181 நிதிசார் கல்வி முகாம்களை நடத்தி 12.87 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு நிதி சார் கல்வி வழங்கியுள்ளனர்.

**சுய உதவிக் குழுக்கள் – வங்கிக் கடன் இணைப்பு திட்டம் (SHG – BLP)**

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு (SHG – BLP) வழங்குவதன் மூலம், கிராமப்புற ஏழை மக்களிடையே, நிதி உள்ளாக்கத்தை ஊக்குவிக்கும் பணியினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது மேற்கொண்டு வருகிறது. இது சுய உதவிக் குழுக்களும் அதன் உறுப்பினர்களும் குறைந்த வட்டி விகிதத்தில் எளிதாக கடன் பெறுவதை உறுதி செய்கிறது.

சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக் கடன் இணைப்பு திட்டத்தின் கீழ், சுய உதவிக் குழுக்கள் கடன் பெறுவதற்கான தகுதிகள் பின்வருமாறு.

- சுய உதவிக்குழுக்கள், அவர்களின் கணக்குப் புத்தகங்களின்படி, குறைந்தபட்சம் 6 மாதங்களுக்கு செயல்பாட்டில் இருக்க வேண்டும் (சேமிப்பு கணக்கு துவங்கிய நாளிலிருந்து அல்ல).

- சுய உதவிக்குழுக்கள் "பஞ்சசூத்திரங்கள்" அதாவது தொடர்ச்சியாக கூட்டம் நடத்துதல், முறையான சேமிப்பு, தொடர் உள் கடன், உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்துதல் மற்றும் கணக்கு புத்தகங்களை முறையாக பராமரித்தல் ஆகியவற்றை கடைபிடிக்க வேண்டும்.
- நபார்டு (NABARD) நிர்ணயித்த தர நிர்ணய விதிமுறைகளின்படி, சுய உதவிக்குழுக்கள் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

மேலும், தற்பொழுது செயல்பாட்டில் இல்லாத சுய உதவிக் குழுக்கள், மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு, குறைந்தபட்சம் மூன்று மாதங்கள் செயல்பாட்டில் இருந்தால் வங்கி கடன் இணைப்பு பெற தகுதி பெறும்.

சுய உதவிக் குழுக்கள் அவர்களின் தேவைகளின் அடிப்படையில், தவணை கடன் (Term Loan) அல்லது ரொக்கக் கடன் (Cash Credit limit) அல்லது இரண்டு வகை கடன்களையும்

பெற்றுக்கொள்ளலாம். தவணை கடனானது குறிப்பிட்ட தவணைகளில் திருப்பி செலுத்தப்பட வேண்டும். ரொக்கக் கடனானது, குறைந்தபட்சம் ரூ.6.00 இலட்சம் என்ற அளவில் நிர்ணயம் செய்யப்பட்டு, வருடத்திற்கு ஒருமுறை வரையறுக்கப்பட்ட அளவின்படி (Yearly Drawing Power) 3 ஆண்டுகள் வரை திருப்பி செலுத்த அனுமதிக்கப்படுகிறது.

குறு தொழில்களுக்கான கடன் உத்தரவாத நிதி திட்டத்தின் (CGFMU) கீழ், முதிர்வடைந்த சுய உதவிக் குழுக்களின் நிதி தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு, ரூ.10 இலட்சம் முதல் ரூ.20 இலட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது.

மேலும், சுய உதவிக் குழுக்களுக்கு நிதி வழங்குவதற்கான இடையீட்டாளராக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் செயல்படும் பொருட்டு வங்கிகளிலிருந்து பெருங்கடன் வழங்கப்படுகிறது. ஊராட்சி அளவிலான

கூட்டமைப்புகள் சுய உதவிக் குழுக்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்குவதன் மூலம் அதிக வட்டியில் கடன் வழங்கும் தனி நபர்களின் பிடியிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர்.

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பின் கீழ் 2021-22 ஆம் ஆண்டு ரூ.21,392.52 கோடியும் 2022-23-ம் ஆண்டு ரூ.25,642.01 கோடியும் கடன் வழங்கப்பட்டு அந்தந்த வருடங்களின் இலக்கை விட அதிகமாக சாதனை எய்தப்பட்டுள்ளது.

2023-24 ஆம் ஆண்டு சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பின் கீழ் ரூ. 30,000 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 4,79,350 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.30,074.76 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. ஒரு சுய உதவிக் குழுவிற்கான சராசரி கடன் அளவு ரூ.6.27 இலட்சம் ஆகும்.

**சுய உதவிக் குழுக்களுக்கான வட்டி மானியம்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், ஊரகப் பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியம் திட்டமானது (ISS) கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

- ரூ.3 இலட்சம் வரையிலான கடன்களுக்கு மண்டல கிராமப்புற வங்கி மற்றும் கூட்டுறவு வங்கிகள் உட்பட அனைத்து வங்கிகளும் ஆண்டுக்கு 7% வட்டி விகிதத்தில் கடன் வழங்கும்.
- ரூ.3 லட்சம் முதல் ரூ.5 இலட்சம் வரையிலான கடன்களுக்கு மண்டல கிராமப்புற வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் உட்பட அனைத்து வங்கிகளும் ஆண்டுக்கு 10% வட்டி விகிதத்தில் அல்லது வங்கியின் ஒரு வருட கடன் விளிம்பு தொகை (MCLR) இதில் எது குறைவோ அந்த

வட்டி விகிதத்தில் கடன் வழங்கும். மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கப்படும் கடனுக்கான வட்டி மானியத்தைப் பெறுவதற்காக, சுய உதவிக் குழுக்களின் வங்கி கணக்குகள் (சேமிப்பு மற்றும் கடன் இரண்டும்) தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட தனிப்பட்ட குறியீடுகளுடன் வங்கி உள்ளக அமைப்பில் (Core Banking System) அடையாளப்படுத்தப்படுவது வங்கி அளவில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

**காப்பீடு மற்றும் ஓய்வூதிய திட்டங்கள்**

பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY), பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா (PMSBY), முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் (CMCHIS) மற்றும் அடல் ஓய்வூதியத் திட்டம் (APY) போன்ற ஆயுள், விபத்து,

மருத்துவ காப்பீடு மற்றும் ஓய்வூதிய திட்டங்களில் தகுதியான அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களும் இணைந்துள்ளதை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதர இயக்கம் உறுதிசெய்கிறது.

மாநில ஊரக வாழ்வாதர இயக்கம் 5,158 சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்கி, மாநிலம் முழுவதும் சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களாக (CBC) பணியமர்த்தியுள்ளது. இந்த சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களை காப்பீடு மற்றும் ஓய்வூதிய திட்டங்களில் இணைக்கும் பணியினை மேற்கொள்கின்றனர்.

2023-24-ம் ஆண்டில், 23.96 இலட்சம் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் ஆயுள் காப்பீட்டிலும், 33.27 இலட்சம் சுய உதவிக் குழு

உறுப்பினர்கள் விபத்துக் காப்பீட்டிலும், 2.89 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மருத்துவக் காப்பீட்டிலும் மற்றும் 1.03 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஓய்வூதிய (APY) திட்டத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

## ஒரு கிராம ஊராட்சி ஒரு வணிக தொடர்பாளர் இயக்கம்

ஊரக பகுதிகளில் அடிப்படை வங்கி சேவைகளை வழங்குவதற்காக மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை வணிக தொடர்பாளர்களாக (BC) ஈடுபடுத்தும் பணியினை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது ஆரம்பித்துள்ளது. இந்த வணிக தொடர்பாளர்கள் (BCs) மும்பையில் உள்ள இந்திய வங்கி மற்றும் நிதி நிறுவனத்தால் (IIBF) நடத்தப்படும் ஆன்லைன் தேர்வில் தேர்ச்சி பெற்று வங்கிகளால் பணியமார்த்தப்பட்ட பின்னர் வயதான

மற்றும் நோயுற்ற மக்களின் வீடுகளுக்கே சென்று வங்கி சேவைகளை வழங்குகின்றனர்.

1,407 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயிற்சியளிக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் உள்ள பல்வேறு வங்கிகளில், வணிக தொடர்பாளர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**மகளிர் தலைமையிலான நிறுவனங்களுக்கு நிதியளித்தல்**

சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடன் இணைப்பானது, சுய உதவிக்குழு உறுப்பினர்களின் நுண்கடன் தேவைகளை பூர்த்தி செய்துள்ளது. இது காலப்போக்கில் நுகர்விலிருந்து வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு அவர்களை நகர்த்திச் சென்றுள்ளது. சுய உதவிக்குழு உறுப்பினர்கள், சுய உதவிக்குழுக்களிடமிருந்து பெற்ற சிறிய அளவிலான கடன்களின் உதவியுடன் பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத துறைகளில்

தங்கள் நிறுவனங்களை நிறுவ முடிந்தது. சுய உதவிக் குழு உறுப்பினர்களின் நிறுவனங்கள் வளரும் போது கடன் பெறுவது கடினமாக உள்ளது. இதனால், தொழில் முனைவோராக உள்ள சுய உதவிக்குழு உறுப்பினர்களில் பெரும்பாலோனோர் ரூ.1.00 இலட்சம் முதல் ரூ.5.00 இலட்சம் வரையும், சிலர் ரூ.10.00 இலட்சம் வரையும் குறைந்த வட்டி விகிதத்தில் எளிய நடைமுறைகளை பின்பற்றி வழங்கப்படும் கடன்களை நாடுகின்றனர்.

மகளிர் தங்களை தொழில் முனைவோராக உருவாக்குவதை ஊக்குவிப்பதற்கும் அவர்களுக்கு அதிகாரமளிப்பதற்கும் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் தேவையின் அடிப்படையில் முத்ரா (MUDRA) திட்டத்தின் கீழ் தகுதியான அனைத்து தொழில்களுக்கும் வங்கிகள் கடன் வழங்குகின்றன.

**தகுதியான தொழில் நிறுவனங்கள்**

பின்வரும் தொழில்கள் இதன் கீழ் தகுதியுடையவை:

- விவசாய அடிப்படையிலான மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில் (ABFPI)
- கனிம அடிப்படையிலான தொழில் (MBI)
- ஆரோக்கியம் மற்றும் அழகுசாதனத் தொழில் (WCI)
- கையால் செய்யப்பட்ட காகிதம், தோல் மற்றும் பிளாஸ்டிக் தொழில் (HMPLPI)
- ஊரக பொறியியல் மற்றும் புதிய தொழில்நுட்பத் தொழில் (RENTI)
- சேவைத்துறை

**சுய உதவிக் குழு உறுப்பினரின் தகுதிகள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சிறப்பாக செயல்படும் முதிர்வடைந்த சுய உதவிக் குழுவின் (சுய உதவிக்குழு ஆரம்பித்து 2 ஆண்டுகள் ஆன சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஒரு முறையாவது வங்கி கடன் பெற்று குறித்த நேரத்தில் திருப்பி செலுத்திய குழுக்கள்) மகளிர் உறுப்பினருக்கு

ரூ.10.00 இலட்சம் வரை வங்கி மூலம் கடன் வழங்கப்படும்.

## 6.3 கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு மூலம் சமூக செயல்பாடுகள்

ஒருங்கிணைத்தல் என்பது பல்வேறு நிறுவனங்கள் ஒன்றிணைந்து சேவைகளை வெற்றிகரமாக வழங்குவதாகும தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் எந்த ஒரு ஏழைக் குடும்பமும் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, முன்னுரிமை அளித்து மிகவும் ஏழைகள், ஏழைகள் மற்றும் சமூகத்தின் பிற நலிவுற்ற பிரிவினரை இணைக்க சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. பிற அரசுத் துறை மற்றும் அதன் திட்டங்களுடன் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஒருங்கிணைப்பு முயற்சிகள் செய்து நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவின் மூலம் நான்கு வெவ்வேறு கூறுகளில் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அ) சமூக உள்ளாக்கம் மற்றும் சமூக மேம்பாடு**

இத்திட்டத்தின் கீழ் விடுபட்ட மற்றும் பின்தங்கிய குடும்பங்களை அடையாளம் கண்டு குழுவாக ஒருங்கிணைத்து, முறையான அணுகுமுறை மேற்கொள்ளப்படுகிறது. விடுபட்ட நபர்களை ஒன்றிணைப்பதன் மூலம், சிறப்பு சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டு, தொடர் சேமிப்பு, தொடர் கூட்டங்களை நடத்தவும், அவர்களின் ஈடுபாட்டின் அடிப்படையில் வாழ்வாதார நடவடிக்கைகளை தொடங்கி செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள், குறிப்பாக விளிம்பு நிலையில் உள்ள பழங்குடியினர் குழுக்கள்(PVTGs), பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) ஆகியோர் சிறப்பு குழுக்களாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதார இயக்கத்தின் கீழ் உருவாக்கப்படுகிறார்கள். சமூக உள்ளடக்கம் மற்றும் சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சில முயற்சிகள்:

**தேவை கண்டறியும் முகாம்**

முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளின் சிறப்புத் தேவைகளைக் கண்டறிவதற்காக, ஆண்டுக்கு இரண்டு முறை, வட்டார அளவில் பிற துறைகளுடன் இணைந்து, தேவை கண்டறியும் முகாம்கள் நடத்தப்பட்டு, பல்வேறு அரசுத் திட்டங்களின் திட்டப் பயன்கள் மற்றும் தேவைகளை, விளிம்புநிலை மற்றும் நலிவுற்ற குடும்பங்களுக்கு கிடைக்கச் செய்திட சிறப்பு மதிப்பீட்டு முகாம்கள் நடத்தப்படுகின்றது.

### i. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்கள் (RBL)

விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்கள் (RBL), விளிம்புநிலை பழங்குடியினர் (PVTGs) மற்றும் நலிவுற்ற குடும்பங்கள் (Vulnerable) எதிர்கொள்ளும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக, அடையாளம் காணப்பட்ட செங்கல் சூளை, கைவினைஞர், விவசாயம், கால்நடை உள்ளிட்ட 9 செயல்பாடுகளில் வாழ்வாதார வாய்ப்புகள் வழங்கிட 12 மாவட்டங்களில் உள்ள 95 வட்டாரங்களில் 3500 விளிம்புநிலை பழங்குடியினர் (PVTGs) மற்றும் நலிவுற்ற குடும்பங்களை (Vulnerable) இலக்காகக் கொண்டு 150 ஒத்த வாழ்வாதாரக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதற்கென ரூ.7.34 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2024–25 ஆம் நிதியாண்டில் எஞ்சிய 25 மாவட்டங்களில் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களைக் கண்டறிய அடிப்படைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அவர்களுக்கான வாழ்வாதார செயல்பாடுகள் கண்டறியப்படவுள்ளன.

**ஆ. உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் (FNHW)**

கடந்த 3 ஆண்டுகளாக, மகளிர் குழு மற்றும் கூட்டமைப்புகள் மூலம் அடிமட்டத்தில் ஒரு உறுதியான கட்டமைப்பு உருவாக்கப்பட்டு, கிராம சமூகத்தில் அடையாளம் காணப்பட்ட பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தவும், பல்வேறு ஊட்டச்சத்து உணவுகளை உட்கொள்வதற்கான நடத்தை மாற்றங்களை உறுப்பினர்களிடையே உருவாக்கவும் தொடர்ந்து பணியாற்றி இரத்த சோகை / ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத

தமிழகத்தை உருவாக்கிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**உணவு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஒருங்கிணைப்பு முயற்சிகள்**

**(i) மக்களைத் தேடி மருத்துவம் (Makkalai Thedi Maruthuvam – MTM)**

மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையால், சுய உதவி குழுக்களில் உள்ள பெண்களை மகளிர் சுகாதார தன்னார்வலர்களாக (Women Health Volunteers – WHV) ஈடுபடுத்தி தொற்றா நோய்கள் கண்டறிவதற்கான பரிசோதனைகள் நடத்தப்படுகிறது. கிராமப்புறங்களில் உள்ள சுகாதார துணை மையங்களுடன் (Health Sub Centres – HSC) 8,713 மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் நாள்பட்ட

நோயாளிகளின் வீட்டிற்கே சென்று தொற்றா நோய்(Non–Communicable Diseases – NCD)க்காக பரிசோதித்து அதற்கான ஆலோசனை மற்றும் மருந்துகளை வழங்குகிறார்கள்.

**(ii) முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் (CMBFS)**

முன்னோடித் திட்டமான ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்கான முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் (CMBFS) அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் நிறுவனத்துடன் இணைந்து சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் செயல்படுத்தப்படுகிறது. கிராமப்புறம் மற்றும் நகர்ப்புரங்களில் இத்திட்டத்தை செயல்படுத்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு / பகுதி அளவிலான கூட்டமைப்பு மூலம் சுய உதவிக்குழுப் பெண்கள்(SHG) தேர்வுசெய்யப்பட்டு சமையற்கூட பொறுப்பாளர்களாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இத்திட்டம்

கிராமப்புறபகுதி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் 28,377 பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு, பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவை சமைத்து வழங்குவதில் 40,629 சுய உதவிக்குழு பெண்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தினமும் காலை உணவு சமைத்த மற்றும் குழந்தைகளுக்குப் பரிமாறப்பட்ட விவரங்களை முதலமைச்சரின் காலை உணவுத்திட்ட கைப்பேசி செயலியில் (CMBFS Mobile APPல்) பதிவு செய்கிறார்கள். இத்திட்டம் சுய உதவிக்குழு பெண்களுக்கு வாழ்வாதாரமாக அமைந்துள்ளது.

**இ) பாலின விழிப்புணர்வு – GBV–2.0**

குழந்தை திருமணம், பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை, பாலியல் துன்புறுத்தல் போன்றவற்றை தடுக்க பாலினம் குறித்த பல்வேறு அணுகுமுறைகள் மாநிலத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு சுய உதவிக்குழுவிலும் பாலினம் தொடர்பான

விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு பிரதிநிதி நம்தோழி–ஆக (Gender Point Person) தேர்வு செய்யப்பட்டுள்ளார், அவர்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பட்டு நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் பாலினம் தொடர்பான அனைத்து செயல்பாடுகள் மற்றும் விழிப்புணர்வை மேற்கொள்வார்கள். இத்திட்டத்தின் கீழ் 2023–24 ஆம் ஆண்டில் பாலினம் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக மாநிலம் முழுவதும் 37 மாவட்டங்களில் வட்டார அளவில் 47 பாலின வள மையங்கள் (வானவில் மையம்) நிறுவப்பட்டுள்ளன.

நம்தோழி (GPP), ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு –சமூக நடவடிக்கைக் குழு (PLF–SAC), வட்டார அளவிலான பாலின மன்றங்கள் (BLGF), வானவில் மையங்கள் (GRC) போன்ற பாலின நிறுவன அமைப்புகளின் பங்கேற்புடன் பாலினப் பிரச்சனைகள் குறித்த தீவிர பிரச்சாரம்

மாநிலம் முழுவதும் கடந்த இரண்டு ஆண்டுகளாக செய்யப்பட்டுள்ளது.

**ஈ) ஊராட்சி நிறுவனங்கள் (ம) சமுதாய சார்ந்த அமைப்புகள் ஒருங்கிணைப்பு**

ஊராட்சி நிறுவனங்கள் (ம) சமுதாய சார்ந்த அமைப்புகள், நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை உள்ளூர்மயமாக்கல் குறியீடுகளை ஊராட்சி நிறுவனங்கள் (ம) சமுதாய சார்ந்த அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு செய்து, ஊராட்சி மற்றும் வட்டார அளவில் உள்ள பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் பயனாளிகளை தேர்வு செய்வதிலும், பல்வேறு அரசு திட்டங்களை செயல்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**கிராம செழுமை மீட்சித் திட்டம் (Village Prosperity Resilience Plan)**

ஊராட்சி நிறுவனங்கள் (ம) சமுதாய சார்ந்த அமைப்புகளின் ஒருங்கிணைப்பு முயற்சிகளின் கீழ், அனைத்து சுய உதவிக்குழுக்களும் அவற்றின் கூட்டமைப்புகளும் கீழ்க்காணும் நான்கு கூறுகளின் கீழ் கிராம செழுமை மீட்சித் திட்டத்தை (VPRP) தயாரிக்கின்றன:

i) உரிமைச் சார்ந்த திட்டம்
ii) வாழ்வாதாரத் திட்டம்
iii) பொது சொத்துக்கள், சேவைகள் மற்றும் வள மேம்பாட்டு திட்டம்
iv) சமூக மேம்பாட்டுத் திட்டம்

கடந்த இரண்டு ஆண்டுகளில் 12,524 கிராம ஊராட்சிகளில் இத்திட்டமானது தயார் செய்யப்பட்டு கிராம வளர்ச்சி திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஊராட்சி அமைப்புகள் மற்றும் பிறத்துறைகளின் மூலம் சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

**ஊராட்சி நிறுவனங்கள் (ம) சமுதாயம் சார்ந்த அமைப்பு ஒரே மாதிரியான அணுகுமுறைகள்**

ஊராட்சி நிறுவனங்கள் (ம) சமுதாயம் சார்ந்த அமைப்பு முன்மாதிரி அணுகுமுறைகளுக்காக ஊராட்சி நிறுவனம் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு அணுகுமுறையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது ஏழை மகளிரை திட்டமிடுதல், செயல்முறைகள் மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்தில் மிகவும் ஆர்வமாக பங்கேற்க உதவுகிறது. இத்திட்டம் 6 மாவட்டங்களில் (தருமபுரி, சேலம், தஞ்சாவூர், தேனி, திருநெல்வேலி, திருச்சி) 75 வட்டாரங்கள் மற்றும் 1963 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. தேசிய அளவிலான ஒரே மாதிரியான அணுகுமுறை, சமூகத்தின் தேவைகளைக் பெறுவதில் கட்டமைக்கப்பட்ட செயலாக்கத்தை எதிர்பார்க்கிறது மற்றும் 18 மாத

காலத்திற்கு சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 6.4 வாழ்வாதார மேம்பாடு

ஊரக பகுதிகளில் உள்ள சுய உதவிக்குழு மகளிரின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காக, பண்ணை சார்ந்த, பண்ணை சாரா மற்றும் விற்பனை தொடர்பான பல்வேறு வாழ்வாதார உத்திகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தொடர்ந்து அறிமுகப்படுத்தி வருகிறது. சுய உதவிக்குழு மகளிர் பண்ணை சார்ந்த, பண்ணை சாராத தொழில்களில் தரமான தயாரிப்புகளை உற்பத்தி செய்து, அவர்களின் தயாரிப்புகளுக்கு ஏற்ப சந்தைகளில் இலாபகரமான விலை கிடைப்பதற்கு இத்தகைய உத்திகள் உதவி புரியும்.

மேலும், வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டப்பணிகளால் சுயஉதவிக்குழு குடும்பங்களில் வேலைவாய்ப்பு உருவாகி, ஆண்டுமுழுவதும்

வருமானம் கிடைக்கும். இதன் மூலம், சுயஉதவிக்குழுவில் உள்ள மகளிர் சமுதாய ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் வலிமை பெறுவார்கள்.

**அ. வாழ்வாதார பணிகள் மற்றும் உத்திகள்**

பண்ணைக்குள்ளேயும், பண்ணைக்கு வெளியேயும் மேற்கொள்ளப்படும் இருவகையான பண்ணை சார்ந்த பணிகளில் செயல்படுத்துவதால், இயற்கைப் பண்ணையம், ஒருங்கிணைந்த பண்ணையம் போன்ற பல்வேறு வேளாண் சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்த தொழில்நுட்பங்கள் தொகுப்பு அணுகுமுறையில் மேம்படுத்தப்பட்டு, அதன் மூலம், மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் விளைபொருட்களை ஒருங்கிணைத்து, மதிப்புக்கூட்டி தொகுப்பாக விற்பனை செய்வதற்கான வழி உருவாகும்.

**பண்ணை சார்ந்த வாழ்வாதாரப் பணிகளின் நடவடிக்கைகள்**

மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களிடையே பண்ணை வாழ்வாதார உத்திகளை பிரபலப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிறுவனம் ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரை, 381 வட்டாரங்களில் படிப்படியாக பண்ணை வாழ்வாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**அட்டவணை எண்.2**

| **ஆண்டு** | **மாவட்டங்கள்** | **வட்டாரங்கள்** |
|---|---|---|
| 2016-17 | 7 | 7 |
| 2017-18 | 10 | 15 |
| 2018-19 | 9 | 29 |
| 2019-20 | 30 | 65 |
| 2020-21 | 25 | 29 |
| 2021-22 | 36 | 49 |
| 2022-23 | 26 | 47 |
| 2023-24 | 37 | 140 |
| **மொத்தம்** | | **381*** |

(*) மொத்தமுள்ள 388 வட்டாரங்களில், நான்கு மாவட்டங்களில் நகர்ப்புரத்தை சார்ந்த ஏழு வட்டாரங்கள்

தவிர, 381 வட்டாரங்களில் 2023-24 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வார இயக்கத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வட்டாரங்களில், பண்ணைக்குள்ளேயும், பண்ணைக்கு வெளியேயும் மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பங்கள் தொடர்பாக, பயிற்சி வழங்கப்பட்டு, பண்ணை சார்ந்த பணிகளை தொகுப்பு அணுகுமுறையில் மேற்கொள்வதற்கு சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகிறார்கள். இதனால், சாகுபடி செலவு குறைகிறது என்பதோடல்லாது மேலும், மகசூல் அதிகரித்து, இவ்விளை பொருட்களுக்கு அதிக விலையும் கிடைக்கிறது.

**பண்ணை உத்திகள்**

2023-24 ஆம் ஆண்டில், வேளாண்மை, தோட்டக்கலை, வனம், மீன் வளம், போன்ற துறைகளுடன் ஒருங்கிணைந்து, பல்வேறு வகையான பண்ணை உத்திகள்

செயல்படுத்தப்பட்டு, மாநில அளவிலிருந்து கிராம ஊராட்சி வரையில் திட்டப்பணிகள் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டன.

**(i) தரமான நெட்டை இரகத் தென்னங்கன்றுகள் உற்பத்தி**

தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு தொடர்ச்சியான வருமானம் தரவல்ல வணிகப் பயிர்களில் தென்னை ஒரு முக்கியமான பயிராக கருதப்படுகிறது. தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி ஓர் இலாபகரமான தொழிலாகும். எனவே, தென்னங்கன்றுகள் உற்பத்தியினை மேற்கொள்வதற்கு மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2023–24 ஆம் ஆண்டில், தோட்டக்கலைத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மாநில தென்னை நாற்றுப்பண்ணைகளில் 241 வட்டாரங்களில் ரூ.195.21 இலட்சம் செலவில் ஏறத்தாழ 723 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு

பயிற்சி அளிக்கப்பட்டது. இவ்வாறு பயிற்சியளிக்கப்பட்ட மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் தென்னங்கன்றுகள் உற்பத்தியினை மேற்கொள்ளும் வகையில், அவர்களுக்கு 2024–25 ஆம் ஆண்டில் நிதி உதவி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**(ii) மருத்துவ குணம் சார்ந்த பயிர்கள் தோட்டம்**

பாரம்பரிய இந்திய மருத்துவத்துக்கு தேவை அதிகரித்து வருவதால், மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் தங்களது நிலங்களில் மருத்துவப் பயிர்களை சாகுபடி செய்ய வாய்ப்பை வழங்குகிறது.

37 மாவட்டங்களிலும் 69 மருத்துவ குணமுள்ள பயிர்த் தொகுப்புகளை அமைப்பதற்கு 2023–24 ஆம் ஆண்டில் ரூ.57.16 இலட்சம் செலவில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

மருத்துவ குணமுள்ள பயிர்களின் சாகுபடி ஒரு வாழ்வாதார நடவடிக்கையாகத் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(iii) சிறுதானிய உற்பத்தித் தொகுப்புகள்**

சர்வதேச சிறுதானிய ஆண்டின் ஒரு பகுதியாக, 2023–24 ஆம் ஆண்டில் தருமபுரி, விருதுநகர் ஆகிய இரு மாவட்டங்களில் 40 சிறுதானியத் தொகுப்புக்கள் ரூ.40 இலட்சம் செலவில் உருவாக்கி சிறுதானியங்களை ஒருங்கிணைத்து, சுத்திகரித்து, மதிப்புக்கூட்டிய பொருட்களாக உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

மகளிர் விவசாயிகள் கூடுதல் வருமானம் ஈட்டும் பொருட்டு சிறுதானியங்களும், சிறுதானிய மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களும், சிறுதானிய அங்காடி (Millet cafe) மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம்

அமைக்கப்பட்டுள்ள பிற சந்தை வாய்ப்புகள் மூலம் சந்தைப்படுத்தப்படுகின்றன.

**(iv) விதை உற்பத்தித் தொகுப்புகள்**

பயிர் மகசூலை அதிகரிப்பதற்கு தரமான விதை விநியோகம் பெரும் பங்காற்றுகிறது. சிறுதானியங்களின் தரமான விதை கிடைப்பதை உறுதி செய்ய சிறுதானிய சான்று விதை உற்பத்தியை சுய உதவிக்குழு மகளிர் விவசாயிகள் தொகுப்பாக மேற்கொள்ள ஊக்குவிக்கப்பட்டு வருகின்றனர். 2023–24 ஆம் ஆண்டில், 15 மாவட்டங்களில் 100 சிறுதானிய விதை உற்பத்தித் தொகுப்புகள் ரூ.2 கோடி செலவில் அமைக்கப்பட்டன. இதேபோன்று மற்ற பயிர்களின் 24 விதை உற்பத்தித் தொகுப்புகள் 5 மாவட்டங்களில் ரூ. 48 இலட்சம் செலவிலும் மேற்கொள்ளப்பட்டன.

உற்பத்தி செய்யப்பட்ட விதைகளுக்கு உரிய விலை கிடைப்பதற்கு விதை சான்றளிப்புத்

துறையுடன் ஒருங்கிணைந்து விதையின் தரம் மற்றும் விதை உற்பத்தியில் கடைபிடிக்க வேண்டிய முறைகள் பின்பற்றப்படுவது முறையாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகள் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் கூடுதல் வருமானம் ஈட்டுவதற்கு துணைபுரிகின்றன.

**(v) அலங்கார வண்ண மீன்கள்**

வகைவகையான வண்ணமிகுந்த அலங்கார மீன் இனங்களை ஒரு கட்டுப்பாடான மீன் வளர்ப்புத் தொட்டியில் வளர்த்து விற்பனை செய்தால், கிராமப்புறப் பகுதிகளில் உள்ள மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மாற்று வேலைவாய்ப்பை உருவாக்கி, அதிக வருமானம் பெற இயலும்.

எனவே, 2023-24 ஆம் ஆண்டில் 10 கடலோர மாவட்டங்களில் 40 வண்ண மீன் வளர்ப்பு அலகுகள் ரூ. 20 இலட்சம் செலவில்

அமைக்கப்பட்டன. மீன்வளத்துறையுடன் ஒருங்கிணைந்து புறக்கடை அலங்கார மீன் வளர்ப்பு திட்டத்தின் கீழ் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு மானிய உதவி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**(vi) சமுதாய பண்ணைப் பள்ளிகள்**

சுய உதவிக்குழு மகளிருக்கு பண்ணை பகுதிகளிலேயே பயிற்சி நடத்துவதன் மூலம் பண்ணை சார்ந்த தொழில்களில் செயல்முறை பயிற்சிகள் வழங்க சமுதாய பண்ணை பள்ளிகள் நடத்தப்படுகின்றன. சமுதாய பண்ணை பள்ளிகள் மூலம் பயிர்க் காலம் முழுவதும் கள செய்முறை விளக்கங்களுடன் தொடர்ச்சியான வழிகாட்டுதல் மற்றும் நேரடிப் பயிற்சி வழங்குவதன் மூலம் சுய உதவிக் குழு மகளிர் விவசாயிகளுக்கு அனைத்து விவசாய பணிகளிலும் கள விழிப்புணர்வை பெற உதவுகிறது.

2023–24 ஆம் ஆண்டில் ரூ. 200 இலட்சம் செலவில் 200 சமுதாயப் பண்ணை பள்ளிகள் நடத்தப்பட்டன. 2024–25 ஆம் ஆண்டில் 500 சமுதாய பண்ணை பள்ளிகள் மாநிலம் முழுவதும் ரூ. 500 இலட்சம் செலவில் நடத்தப்பட உள்ளன.

**(vii) சமூக வல்லுநர்களின் (பண்ணை) அறிவை வலுப்படுத்துதல்**

கிராமங்களில் வேளாண் விரிவாக்க சேவையில் உள்ள இடைவெளியினை போக்கும் வகையில், சமுதாய வளப் பயிற்றுநர்களுக்கு வேளாண் சூழலியல், இயற்கை வள மேலாண்மை, பல்பயிர் சாகுபடி மற்றும் இதர சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்நுட்ப முறைகள் தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு பயிற்சி பெற்ற சமுதாய வளப் பயிற்றுநர்கள் வேளாண் சார்ந்த துறைகள் மற்றும் விவசாயிகளுக்கு இடையே திறனுள்ள தகவல்

நபராகவும், விரிவாக்க சேவையில் துணை பணியாளர்களாகவும் செயலாற்றுவார்கள்.

2023-24 ஆம் ஆண்டில் 1,230 சமுதாய வளப் பயிற்றுநர்களுக்கு 5 நாட்கள் தங்கி பயிலும் முறையில் இந்த பயிற்சி வழங்கப்பட்டன.

**ஆ. பண்ணை சாரா வாழ்வாதார நடவடிக்கைகள்**

பண்ணை அடிப்படையிலான வாழ்வாதார நடவடிக்கைகள் குறிப்பிட்ட காலநிலையை சார்ந்துள்ளதால், காலம் தவறிய பருவமழை மற்றும் அதன் வீழ்ச்சியால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். கிராமப்புற ஏழை மக்களுக்கு நிலையான வருமானத்தை உறுதி செய்யவும் மற்றும் வருமானத்தை பெருக்கவும் பல்வேறு பண்ணை சாரா தொழில்கள் ஊக்குவிக்கப்படுகிறது.

பண்ணை சாரா முயற்சிகளில் உற்பத்தி மற்றும் சேவைப் பிரிவுகளின் கீழ்க்கண்ட செயல்பாடுகள் அடங்கும்:

i) குறு நிறுவன மேம்பாடு

ii) தொகுப்பு மேம்பாடு – கைவினைஞர் மற்றும் துறை சார்ந்த தொகுப்புகள்.

iii) ஓரிட சேவை மையம்

iv) சமுதாயத் திறன் பள்ளி (CSS)

v) கிராம புத்தொழில் முனைவோர் திட்டம்(SVEP)

**(i) குறு நிறுவன மேம்பாடு**

கிராமப்புறங்களில் உள்ள தனிநபர் மற்றும் குழு நுண் தொழில் நிறுவனங்கள் தங்கள் தொழில்களுக்கு தேவையான திறன்களை வலுப்படுத்தி உதவிகளை வழங்குவதன் மூலம் ஊக்குவிக்கப்படுகின்றன.

இதில், வணிகத் திட்டத்தைத் தயாரிப்பதில் பயிற்சி, இணக்க விதிமுறைகள் பற்றிய அறிவை வழங்குதல், நிறுவனங்களை அமைப்பதற்கு முன் மற்றும் பின் தேவைப்படும் இணைப்புக்கான வாய்ப்பை உருவாக்குதல், திறந்த சந்தையின்

பயன்பாடுகள், மின் வணிகம் போன்றவை அடங்கும்.

2023-24-ஆம் ஆண்டில், குறு நிறுவனங்கள் மேம்பாட்டை ஊக்குவிப்பதற்காக 1,050 புதிய நிறுவனங்களும் மற்றும் 350 நடப்பு நிறுவனங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

**(ii) தொகுப்பு மேம்பாடு**

உற்பத்திச் செலவைக் குறைத்தல், தொழில்நுட்ப உதவியை பெறுதல், அதிக விலை பெறும் தகுதியை மேம்படுத்துதல் மற்றும் பொருளாதார அளவுகோலை அதிகரிப்பதே தொகுப்பு மேம்பாட்டின் நோக்கமாகும்.

நிறுவனங்களை நடத்துவதற்கான அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டு மூலதனத்தை உருவாக்குவதற்கான நிதி உதவியை விரிவுபடுத்துவதற்காக பல்வேறு துறைகளில் அடையாளம் காணப்பட்ட பெண்

தொழில்முனைவோர்கள் தொகுப்பு குழுக்களாக ஒருங்கிணைக்கப்படுகிறார்கள்.

2023–24 ஆம் ஆண்டில், 10 சாத்தியமான தொகுப்புகள் கண்டறியப்பட்டு, அவர்களின் வணிகத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளுக்கான ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**(அ) கைவினைஞர் தொகுப்புகள்**

கைவினைஞர் தொகுப்பு, குறிப்பிட்ட நிலப்பரப்பிற்குள் தலைமுறை தலைமுறையாக தொழில் முனைவோர் உறுப்பினர்களால் பாரம்பரிய மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் கைவினைஞர் தொகுப்புகளாக உருவாக்கப்படுகின்றன. உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கும், மொத்தமாக விற்பனை செய்வதற்கும், சிறந்த விலை பெறும் தகுதியை மேம்படுத்துவதற்கும், உலகமயமாக்கப்பட்ட சந்தையில் போட்டியிடும் வகையில்

தயாரிப்புகளை பல்வகைப்படுத்துவதற்கும் ஊக்குவிக்கப்படுகின்றன.

2023–24 ஆம் ஆண்டில், செயல்படுத்த ஐந்து சாத்தியமான கைவினைஞர் தொகுப்புகளை அடையாளம் கண்டு 2024–25ல் செயல்படுத்த விரிவான ஆய்வு மேற்கொள்ளப் படுகிறது.

**(ஆ) துறை சார் தொகுப்புகள்**

மகளிர் சுய உதவிக் குழுக்களின் நிறுவனங்களும், ஒரே மாதிரியான தயாரிப்புகளில் ஈடுபட்டுள்ள மதிப்புச் சங்கிலி நிறுவனங்களும் துறை சார் குழுக்களின் கீழ் கொண்டு வரப்படுகின்றன. மூலப்பொருட்களின் ஆதாரத்தை அடையாளம் காணுவதற்கும், கொள்முதல் செய்வதற்கும் உதவுகிறது, மேலும் சவால்களை கண்டறிந்து உற்பத்தி மற்றும் விற்பனைக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும் உதவுகிறது. இதன் மூலம் உற்பத்தி,

விற்பனையை அதிகரித்து நியாயமான விலையை பெற்று வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவுகிறது,

2023-24 ஆம் ஆண்டில், ஐந்து துறை சார்ந்த தொகுப்புகள் அடையாளம் காண்பதற்காக விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 2024-25 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

**(iii) ஓரிட சேவை மையம்**

ஓரிட சேவை மையமானது ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள நிறுவனங்கள் மற்றும் புதிய நுண் மற்றும் குறு நிறுவனங்களுக்கு வணிக மேம்பாட்டு சேவைகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இச்சேவை மையத்தின் மூலம் கருத்துருவாக்கம், ஆலோசனை மற்றும் புதிய நிறுவனத்தைத் தொடங்குதல் பற்றிய தொழில்நுட்ப அறிவு ஆகிய சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தற்போதுள்ள நிறுவனங்களுக்கு வணிகத் திட்ட தயாரிப்பு, தொழில் முனைவோர் திறன் பயிற்சி, மதிப்புச்

சங்கிலி நடவடிக்கைகளின் இணைப்புகள், வழிகாட்டி ஆதரவு மற்றும் நிதி உள்ளிட்ட அனைத்து வணிகத் தேவைகளுக்குமான ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

தொழில்நுட்பத்திற்கான அணுகுமுறை, ஒழுங்குமுறை விதிகளுக்கு உட்படுதல், சந்தை நுண்ணறிவு, ஒருங்கிணைப்பு மற்றும் சந்தைபடுத்துதலுக்கான அணுகுமுறை ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன.

**(iv) சமுதாயத் திறன் பள்ளி**

சமுதாயத் திறன் பள்ளி ஆனது ஒரு தொகுதிக்கு 20 பயிற்றுநர்களை கொண்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. வெற்றிகரமாக நிறுவனங்களை நடத்திவரும் அனுபவம் வாய்ந்த உள்ளூர் பயிற்சியாளர்களை ஈடுபடுத்தி நேரடியாக பயிற்சியளிக்கப்படுகிறது.

இதன் மூலம் பயிற்சியாளர்களுக்கு நம்பிக்கையை உருவாக்கி ஒரு சுமூகமான சூழ்நிலையை உருவாக்க உதவுகிறது. ஒரு நிறுவனத்தை நடத்துவதில் நடைமுறையில் ஏற்படக்கூடிய சிக்கல்களைச் சமாளிப்பதற்கான வழிகளைப் புரிந்துகொள்ளவும் இது உதவுகிறது.

**(v) கிராம புத்தொழில் முனைவோர் திட்டம் (SVEP)**

கிராமப்புற ஏழைகள் புதிய நிறுவனங்களை நிறுவுவதற்கும், தற்போது இயங்கி வரும் நிறுவனங்களை மேம்படுத்துவதற்கும், நிறுவனங்கள் நிலைபெறும் வரை வழிகாட்டுதலே இதன் நோக்கமாகும். வணிகத் திறன்கள் மற்றும் ஆதரவு சேவைகளை வழங்குவதில் சமுதாய வள பயிற்றுனர்கள் (தொழில் மேம்பாடு) முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக கருதப்படுகின்றனர். சமுதாய நிறுவன நிதியானது வணிகத் திட்டத்தின் ஒப்புதலின் பேரில் வழங்கப்படுகிறது. சமுதாய

முதலீட்டு நிதி மற்றும் வங்கி இணைப்பு மூலம் நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டம் 8 மாவட்டங்களிலுள்ள 10 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது.

**இ. மகளிர் சுய உதவிக்குழு உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தல்**

சந்தைப்படுத்தல் என்பது தனித்துவ முத்திரை (Brand) விழிப்புணர்வு, விளம்பரப் பிரச்சாரங்கள், கண்காட்சிகள் மற்றும் மின்னணு வர்த்தக முயற்சிகள் மூலம் மகளிர் சுய உதவிக்குழுக்களின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை சாத்தியமான வாடிக்கையாளர்களுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு உத்தியாகும். மகளிர் சுயஉதவிக்குழு தயாரிப்புகள் தர உத்தரவாதத்துடன் சந்தைப்படுத்தப்படுவதை உறுதிசெய்ய தரப்படுத்தல் நெறிமுறைகளை கடைபிடிப்பது கண்டிப்பாக வலியுறுத்தப்படுகிறது.

இது " மதி " என்ற தனித்துவ அடையாள முத்திரை (Brand) பெயரில் நிலையான பேக்கேஜிங் மற்றும் லேபிளிங் இணக்கங்கள் மூலம் விளம்பரப்படுத்தப்படுகிறது.

**(i) விளம்பர நடவடிக்கைகள்**

சந்தைப்படுத்தலை ஊக்குவிக்க பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. கண்காட்சிகள், பல்வேறு பஜார்கள், வணிகம் முதல் வணிக சந்திப்பு (B2B), சந்தைப்படுத்தல் உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல் போன்றவற்றின் மூலம் தயாரிப்புகள் காட்சிப்படுத்தவும் மகளிர் சுய உதவிக்குழு தயாரிப்புகளின் விற்பனையை அதிகரிக்கவும் சிறப்பான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது.

மகளிர் சுயஉதவிக்குழு தயாரிப்புகளின் மொத்த விற்பனையை அதிகரிக்க பெருநிறுவனங்கள் மற்றும் இதர

நிறுவனங்களின் மூலமாக "மதி" பிராண்டின்கீழ் பல்வேறு பரிசுப் பெட்டகங்கள் விற்பனை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**(ii) கண்காட்சிகள் மற்றும் மேளாக்கள்**

பரந்த சந்தையைப் பற்றிய சிறந்த புரிதலுக்காக தேசிய மற்றும் பிராந்திய அளவிலான " சாராஸ்" ( SARAS ) கண்காட்சிகளில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் பங்கேற்பு ஊக்குவிக்கப்படுகிறது. நகர்ப்புற சந்தையின் இயக்கவியலைப் புரிந்து கொள்ள மாநில மற்றும் மாவட்ட அளவிலான கண்காட்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்த வழிகள் மகளிர் சுயஉதவிக்குழு பங்கேற்பாளர்களுக்கு நுகர்வோர் விருப்பம் மற்றும் சந்தை தேவை பற்றி அறிய உதவுகிறது.

**(iii) இயற்கை அங்காடி**

இயற்கைப் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வு நுகர்வோர் மத்தியில் அதிகரித்துள்ள நிலையில், மகளிர் சுய உதவிக்குழு பெண் விவசாயிகள் இயற்கை விவசாயத் தொகுப்பு (Natural Farming Clusters) மூலம் பண்ணை பொருட்களை உற்பத்தி செய்ய ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

இந்த தயாரிப்புகளை சந்தைப்படுத்தவும், விற்பனையை ஊக்கப்படுத்தவும் மாநில தலைமை அலுவலகத்தில் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை " இயற்கை அங்காடி" (Natural Bazaar) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நகர்ப்புற நுகர்வோரின் அபரிமிதமான வரவேற்பின் காரணமாக தொலைதூர கிராமப்புறங்களில் இருந்து பொருட்கள் இயற்கை அங்காடி மூலம்

தொடர்ந்து விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன.

2023-24 ஆம் ஆண்டில் 9,971 சுய உதவிக்குழுக்கள் 283 கண்காட்சிகளில் பங்கேற்று ரூ.8.30 கோடி மதிப்பிலான உற்பத்தி பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**(iv) மதி அங்காடி மற்றும் நடமாடும் விற்பனை வாகனம்**

மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள முக்கிய பொது இடங்களில் மதி அங்காடிகள் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் உள் மற்றும் மலைப் பகுதிகளில் இருந்து சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கு வசதியாக நகர்புறங்களில் விற்பனைக்கு நடமாடும் விற்பனை வாகனங்கள் (MaThi Express) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2023-24ஆம் ஆண்டில் மாற்றுத்திறனாளி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.5 கோடி

மதிப்பிலான 100 நடமாடும் விற்பனை வாகனங்கள் வழங்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

**(v) மின்னணு வர்த்தக இணைய முகப்பு (E – Commerce Portal)**

பாரம்பரியம், தரம் மற்றும் கைவினை என்ற தனித்துவமான விற்பனைப் புள்ளியுடன் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம் சுய உதவிக்குழுக்கள் விற்பனைக்கு காட்சிப்படுத்தப்படுகின்றன. உலகெங்கிலும் உள்ள வாடிக்கையாளர்கள் www.mathisandhai.com என்ற இணைய தளம் மூலம் தனித்துவமான தயாரிப்புகளை தங்கள் விருப்பம்போல் வாங்குவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளனர். விளம்பர நடவடிக்கையாக 100 தயாரிப்புகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவை மேலும் அதிகரிக்கப்படும்.

**(vi) மதி அனுபவ அங்காடி**

சென்னை, நுங்கம்பாக்கம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன அலுவலகம் அமைந்துள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் கிராமப்புற மற்றும் நகர்ப்புறத்தைச் சேர்ந்த சுய உதவிக்குழு பெண்களின் உற்பத்திப்பொருட்களை காட்சிப்படுத்தவும் விற்பனை செய்யவும் முதல் முறையாக "**மதி அனுபவ அங்காடி" (MaThi Experience Store**) அமைக்கப்பட்டு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை **அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின்** அவர்களால் 18.11.2023 அன்று துவக்கிவைக்கப்பட்டுள்ளது. இந்த அங்காடிக்கான தயாரிப்புகள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பெறப்படுகின்றன. அவை தொடர்ந்து வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பிராந்திய சுவைகளைக் கொண்டுள்ளன.

மகளிர் சுய உதவிக்குழு தயாரிப்பாளர்கள் இன்றி பொருட்களை விற்பனை செய்து அவர்களின் உற்பத்தி தளத்தில் இருந்து வருமானம் ஈட்டுவது கடையின் தனிச்சிறப்பு. தயாரிப்புகளின் தொடு உணர்வு (Touch and Feel Experince) அனுபவத்தைப் பெறுவதன் மூலம் வாடிக்கையாளரிடமிருந்து மொத்த ஆர்டர்களை பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**(vii) வாங்குபவர் விற்பனையாளர் சந்திப்பு**

வர்த்தகர்கள் சந்திப்பு என்பது கட்டமைக்கப்பட்ட கூட்டங்கள் மூலம் வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் பயனுள்ள வணிக வாய்ப்புகளை வழங்குவதற்கான அடிப்படை தளமாகும். கண்காட்சியாளர்களுக்கும் வாங்குபவர்களுக்கும் இடையிலான நேரடித் தொடர்பு மிகச்சிறு மற்றும் சிறு உற்பத்தியாளர்களுக்கு ஒருங்கிணைப்பு மற்றும் சந்திப்பின்போது பேச்சுவார்த்தை

நடத்தப்பட்ட வணிகத்தின் அளவை உருவாக்குவதற்கான வாய்ப்பை உருவாக்குகிறது. மாநில அளவிலான முதல் வாங்குவோர் விற்பனையாளர் சந்திப்பு கூட்டத்தை **மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 19.06.2023 அன்று திருச்சி** மாவட்டத்தில் துவக்கிவைத்தார்கள்.

2023–24 ஆம் ஆண்டில் மாநில அளவிலான வாங்குபவர் விற்பனையாளர் சந்திப்பு நிறைவடைந்தது. மொத்தம் 388 வட்டாரங்களின் 342 வட்டாரங்களில் வாங்குபவர் விற்பனையாளர் சந்திப்புகள் நிறைவு செய்யப்பட்டு 854 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

**(viii) சிறுதானிய உணவகங்கள் (Millet Cafe)**

மக்களிடையே சிறுதானிய நுகர்வு மற்றும் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை அதிகரிக்க அனைத்து ஒருங்கிணைந்த மாவட்ட ஆட்சியர்

அலுவலக பெரும்திட்ட வளாகங்களில் சிறுதானிய உணவகங்கள் தொடங்க முன்மொழியப்பட்டது. பொதுமக்கள் சிறுதானிய மதிப்பு கூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் மற்றும் சமைத்த உணவுகளை அணுக ஏதுவாக இந்த உணவகங்கள் அமைக்கப்பட்டது. மாநில அளவில் முதல் சிறுதானிய உணவகம் **மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் அவர்களால் 26.09.2023 அன்று தருமபுரி** மாவட்டத்தில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. 2023–24 ஆம் ஆண்டில் உணவக விற்பனை மூலம் ரூ.24.89 இலட்சம் உணவுப்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது,

**6.5 திறன் பயிற்சி**

மாநில அளவில் தொழில்துறை உள்ளிட்ட அனைத்துத்துறைகளிலும் மக்கள் நலனுக்காக

பல்வேறு திட்டங்களைத் தொடங்கி செயல்படுத்துவதில், தமிழ்நாடு எப்பொழுதும் முன்னோடி மாநிலமாக இருந்து வருகிறது. தமிழ்நாட்டின் இளைஞர் மேம்பாட்டிற்கான திறன் பயிற்சி திட்டம் இவற்றுள் ஒன்றாகும்.

இந்தியாவின் தொழில்மயமான மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். மாநில அரசால் உருவாக்கப்பட்ட சாதகமான முதலீட்டுச் சூழல், வலுவான உட்கட்டமைப்பு ஆகியவை பன்னாட்டு நிறுவனங்களின் உயர் முதலீட்டை அதிகம் ஈர்த்துள்ளது. இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு அதிக அளவில் இருந்தாலும் அவர்களுக்கான திறன் குறைபாடு காரணமாக மாநிலத்தில் உள்ள பல லட்சம் கிராமப்புற இளைஞர்கள் வேலைவாய்ப்பினை இழக்க நேரிடுகிறது. திறன் பயிற்சியுடைய தொழிலாளர்களின் தேவைக்கும் வழங்கலுக்கும் இடையே உள்ள பெரும் இடைவெளியை

உணர்ந்து தீன தயாள் உபாத்யாய கிராம திறன் பயிற்சி திட்டம் (DDU–GKY) மூலம் கிராமப்புற ஏழை இளைஞர்களுக்காக வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சியும், ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs) வாயிலாக சுய வேலை வாய்ப்பை உருவாக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs)**

ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் முன்னோடி வங்கிகளால் அமைக்கப்பட்டு கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புகளையும் தொழில் முனைவோர்களையும் உருவாக்க பயிற்சி அளித்து இளைஞர்களுக்கு வங்கி கடன் இணைப்புகளை வழங்கி வருகிறது. மத்திய ஊரக வளர்ச்சி துறை அமைச்சகம் பயிற்சி நிறுவன கட்டுமானத்திற்கு

தேவையான நிதியை வழங்குவதுடன் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள ஊரக இளைஞர்களின் பயிற்சிக்கு தேவையான பயிற்சி கட்டணத்தையும் வழங்குகிறது.

தற்போது தமிழ்நாட்டில் 36 ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகிறது. மேலும், கள்ளக்குறிச்சி மாவட்டத்திலும் ஒரு ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனம் துவங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2023–24 நிதியாண்டில் 29,061 ஊரக இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு பயிற்சி வழங்கப்பட்டதுடன், 13,974 இளைஞர்களுக்கு வங்கி கடன் வழங்கப்பட்டு 22,965 இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

**இளைஞர் திறன் திருவிழாக்களுடன் கூடிய வேலைவாய்ப்பு முகாம்கள் (Youth Skill Festival (YSF) cum Job Melas)**

மாநிலத்தில் உள்ள ஏராளமான இளைஞர்களுக்கு பல்வேறு துறைகளில் உள்ள திறன்கள் மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்து அறிவதற்கு விழிப்புணர்வு அவசியம். இளைஞர்கள் தங்கள் விருப்பங்களின் படி திறன்களை பெறும் பொழுது அத்திறன் அவர்களின் வாழ்வாதாரங்களையும் வேலைவாய்ப்புகளையும் பெரிதும் முன்னேற்ற ஏதுவாய் இருக்கும்.

இளைஞர் திறன் திருவிழா என்பது ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு தொழிற்பயிற்சி திட்டங்கள் குறித்து இளைஞர்களுக்கு விழிப்புணர்வு வழங்கும் நோக்கத்துடன் ஊரக இளைஞர்கள் தங்கள் விருப்பம் மற்றும் தங்களுக்கு பொருத்தமான

திறன் வளர்ப்பு பயிற்சிகளை தேர்வு செய்வதை நோக்கமாக கொண்டது.

இது போன்று ஏற்கனவே திறன் பயிற்சி பெற்ற, பகுதித்திறன் உடைய மற்றும் திறன் பயிற்சி இல்லாத ஊரக இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பை பெற்று தருவதற்கு வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும், ஊரக இளைஞர்கள் திறன் பயிற்சி அல்லது வேலைவாய்ப்பு முகாம் ஆகிய ஏதாவது ஒன்றை தேர்வு செய்யும் விதமாக தமிழக அரசானது 2023–24 ஆம் ஆண்டில் இளைஞர் திறன் திருவிழாவையும் வேலைவாய்ப்பு முகாம்களையும் ஒன்றிணைத்து ஒரே நிகழ்வாக நடத்துவதற்கு அனுமதி அளித்திருந்தது. அதன்படி மாநிலத்தின் முக்கிய 100 இடங்களில் இளைஞர் திருவிழாவுடன் கூடிய வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது.

இம்முகாம்களில் மொத்தம் 2,16,076 இளைஞர்கள் பங்கு பெற்றதுடன் 21,190 இளைஞர்கள் DDU–GKY, RSETI, TNSDC உள்ளிட்ட திறன் பயிற்சி திட்டங்களில் தேர்வு செய்யப்பட்டு அவர்களில் 10,116 இளைஞர்கள் திறன் பயிற்சிகளில் சேர்ந்துள்ளனர். இது மட்டுமன்றி 24,352 இளைஞர்கள் பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களிலும் நேரடி வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

இளைஞர்களை தேர்வு செய்யும் பொழுது NIRD&PR நிறுவனம் மூலம் உருவாக்கப்பட்ட பிரத்தியேக கௌசல் ஆப்தி செயலி (திறன் கண்டறியும் செயலி) மூலம் அவர்களின் திறன்கள், விருப்பங்கள் மற்றும் திறன் தொகுப்புகள் கண்டறியப்படுகிறது. இவற்றின் மதிப்பீட்டின் அடிப்படையில் இளைஞர்கள் பயிற்சியினை தேர்ந்தெடுப்பதற்கும்

வேலைவாய்ப்பினை பெறுவதற்கும் தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

**மாபெரும் பணி நியமன ஆணை வழங்கும் விழா (Mega Placement Function)**

DDU–GKY திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும் பணி நியமன வாய்ப்புகளை பயிற்சி முடித்தவர்களுக்கு பெற்று தருவதற்கும் 01.12.2023 அன்று மாபெரும் பணி நியமன ஆணை வழங்கும் விழா சென்னையில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பயிற்சி பெற்ற 1,000 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

## 6.6 விருதுகள்

**ஊரகம் மற்றும் நகர்ப்புறங்களில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் மக்கள் அமைப்புகளுக்கான மணிமேகலை விருது**

சிறந்த சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச்சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வட்டார அளவிலான கூட்டமைப்புகள், பகுதி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் நகர்ப்புற அளவிலான கூட்டமைப்புகளின் சமூக பொருளாதார மேம்பட்டு நடவடிக்கைகளின் பங்களிப்புகளை அங்கீகரித்து ஊக்குவித்து பாராட்டும் விதமாக மணிமேகலை விருதுகள் வழங்கப்படுகின்றன.

மாநில அளவில், ஊரகப்பகுதிகளில் 10 சுய உதவிக் குழுக்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், 5 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், ஒரு வட்டார

அளவிலான கூட்டமைப்புக்கு ஐந்து இலட்சம் ரூபாயும், நகர்ப்புறப்பகுதிகளில் 10 சுய உதவிக் குழுக்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், 3 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும் ஒரு நகர்ப்புற அளவிலான கூட்டமைப்புக்கு ஐந்து இலட்சம் ரூபாயும், சான்றிதழ்களுடன் கூடிய விருதுகளும் வழங்கப்படுகின்றன.

மாவட்ட அளவில், தலா ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஊரகப் பகுதிகளில் சிறப்பாக செயல்படும் 3 சுய உதவிக் குழுக்களுக்கு தலா இருபத்தைந்தாயிரம் ரூபாயும், ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், ஒரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும், நகர்ப்புறப்பகுதிகளில் சிறப்பாக செயல்படும் 3 சுய உதவிக்குழுக்களுக்கு தலா இருபத்தைந்தாயிரம் ரூபாயும், ஒரு பகுதி அளவிலான கூட்டமைப்புக்கு ஒரு இலட்சம்

ரூபாயும், சான்றிதழ்களுடன் கூடிய விருதுகளும் வழங்கப்படுகின்றன.

**சிறப்பாக செயல்படும் வங்கிகளுக்கான விருதுகள்**

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்குவதில் வங்கிகளின் குறிப்பிடத்தக்க பங்கினை கருத்தில் கொண்டு சிறப்பாக செயல்படும் வங்கிகள் மற்றும் வங்கி கிளைகளை கௌரவிக்கும் விதமாக சிறந்த வங்கிகள் மற்றும் வங்கி கிளைகளுக்கான விருதுகள் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த விருதானது சிறப்பாக செயல்படும் வங்கிகளை ஊக்குவிப்பதோடு வங்கிகளிடையே ஆரோக்கியமான போட்டியை உருவாக்கியுள்ளது.

# 7. தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் (NRETP)

## 7. தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம்

தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டத்தின் நோக்கமானது வாழ்வாதாரத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் திறமையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதோடு, மிகவும் ஏழைகளுக்கு கூடுதல் முதலீடுகளை வழங்குவதே ஆகும். உலக வங்கியானது இந்த திட்டத்திற்காக ஒன்றிய அரசுக்கு நிதி உதவி வழங்குகிறது. இத்திட்டத்திற்கு ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் முறையே 60:40 என்ற விகிதத்தில் நிதிப்பகிர்வு வழங்குகிறது. இந்த திட்டம் 2019–20 ஆம் **ஆண்டிலிருந்து திருச்சி, தஞ்சாவூர், ஈரோடு, சேலம் மற்றும் கடலூர் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள 20 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது.**

மாதிரி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல், மதிப்பு கூட்டு சங்கிலி வளர்ச்சி,

பண்ணை மற்றும் பண்ணை அல்லாத துறைகளில் தனிநபர் மற்றும் கூட்டு நிறுவனங்களை மேம்படுத்தல், திறன் வளர்ச்சி மற்றும் நிதிச் சேவைகளை வழங்குவதற்கான மாற்று மாதிரிகளை அளவிட்டு சமூக வளர்ச்சி பெற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

முக்கிய அம்சங்கள்:

- மாதிரி அளவிலான கூட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்தி, மற்ற வட்டாரங்களுக்கு ஒரு முன்மாதிரி வட்டாரமாக இயங்குதல்.
- சமுதாய மக்களின் திறன் மேம்பாட்டிற்காக சமுதாய மேலாண்மை பயிற்சி மையம் (CMTC) உருவாக்கப்படுகிறது.
- சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு மின்னணு நிதி சேவை பயன்பாடுகளான IMPS, UPI மற்றும் Bank PoS Machine குறித்த பயிற்சி வழங்குதல்.
- மகளிர் வாழ்வாதார சேவை மையங்கள் ஒரு நிறுவன மையமாக உருவாக்கப்பட்டு, புதிய தொழில்கள் தொடங்கவும் ஏற்கனவே உள்ள

தொழில்களை விரிவுபடுத்தவும் சேவைகள் புரிகின்றன.

### 7.1 மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்புகள் (MBLFs)

வட்டார அளவிலான கூட்டமைப்பினை இரண்டாம் நிலை கூட்டமைப்பாக வலுப்படுத்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு அணுகுமுறையை பின்பற்றுகிறது. இந்த திட்டம் வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் திறன்களை வலுப்படுத்துகிறது. இதனால் தன்னம்பிக்கை மற்றும் தன்னிறைவு பெற்ற நிதியமைப்பாகவும் உருவாக்கப்படுகிறது. இந்த மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்புகள், மற்ற வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் திறன்களை உருவாக்குவதற்கான செயல்விளக்க தளங்களாக செயல்படும். வட்டார அளவிலான கூட்டமைப்புகள் தங்கள் உறுப்பினர்களின் தேவைகளைப் புரிந்துகொள்வதற்கான தொலை

நோக்கு பயிற்சியை மேற்கொள்ளும். பின்னர் உறுப்பினர்களுக்கு பொருத்தமான சேவைகள் மற்றும் உற்பத்திகளை வடிவமைத்து வழங்கப்படும்.

## 7.2 மின்னணு நிதி பரிவர்த்தனை

மின்னணு நிதி பரிவர்த்தனையானது, வாடிக்கையாளர்கள் எந்த நேரத்திலும் எவ்விடத்திலிருந்தும் எளிதாக பணம் செலுத்துவதற்கான நெகிழ்வு தன்மையை வழங்குகிறது. தேசிய ஊரக புத்தாக்க திட்டமானது, சுய உதவிக்குழு உறுப்பினர்களிடையே மின்னணு நிதி பரிவர்த்தனை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளதோடு பல்வேறு மின்னணு நிதி பரிவர்த்தனை முறைகள் குறித்து அவர்களுக்கு பயிற்சி அளிக்கிறது. ஏழை குடும்பங்களையும் முறையான வங்கி நடைமுறைகளின் கீழ் கொண்டு வருவதன்

மூலம் நிதி உள்ளாக்கத்தை அதிகரிப்பதற்கு வணிக தொடர்பாளர்கள் (BC) முக்கிய கருவியாக உள்ளனர். வணிக தொடர்பாளர்கள் (BC) மூலம் மின்னணு நிதி பரிவர்த்தனைகள் ஊக்குவிக்கப்படுவதுடன் பயிற்சி பெற்ற சுய உதவிக் குழு உறுப்பினர்கள் வணிக தொடர்பாளர் தோழிகளாக (BC Sakhi's) பணியமர்த்தப்படுகின்றனர். இது அனைத்து ஊராட்சிகளிலும் வணிக தொடர்பாளர்களின் (BC) சேவையை விரிவுபடுத்த உதவுவதுடன் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கும் ஊரக பகுதிகளில் உள்ள மற்ற வாடிக்கையாளர்களுக்கும் வங்கி சேவைகள் குறைந்த செலவில் வீட்டின் அருகில் கிடைக்க வழி வகுக்கிறது. மேலும், நிதி பரிவர்த்தனைகளை மின்னணு தளங்களில் மேற்கொள்ள உதவுகிறது.

## 7.3 இரட்டை அங்கீகாரத்திற்கான முன்னோட்டம்

கிராமங்களில் வணிக தொடர்பாளர்கள் (BC) மூலம் மக்களின் வீட்டின் அருகில் நிதி சேவைகளை வங்கிகள் வழங்குகின்றன. மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகளின் வங்கிக் கணக்குகள் (அதாவது வட்டார அளவிலான கூட்டமைப்பு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள்) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் கூட்டு கையொப்பங்களுடன் இயக்கப்படுகின்றன. மேலும், அவர்கள் வங்கி வணிக தொடர்பாளர்கள் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் வங்கி கணக்குகளில் பணம் செலுத்த மட்டுமே முடியும் என்ற நிலை முன்னர் இருந்தது. கூட்டாக இயக்கப்படும் வங்கி கணக்குகளில் பணப்பரிமாற்றங்களை வங்கி வணிக

தொடர்பாளர்களிடம் மேற்கொள்ளும் பொருட்டு 'இரட்டை அங்கீகாரம்' எனும் தனித்துவமான வசதியினை வங்கிகள் சமீபத்தில் ஏற்படுத்தியுள்ளன. இரட்டை அங்கீகாரத்தின் கீழ், சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகளின் சேமிப்பு கணக்குகள் வங்கி வணிக தொடர்பாளரிடம் இணைக்கப்பட்டு, வங்கி கணக்கை கையாளும் இரு உறுப்பினர்களின் கைரேகை (Biometric) அங்கீகாரம் மூலம் அவர்களின் வங்கி கணக்கிலிருந்து பணம் எடுக்கவும், பணம் செலுத்தவும் முடியும். சுய உதவிக் குழுக்கள் பணப் பரிவர்த்தனைக்காக வங்கிக்கு செல்ல தேவையில்லை. இதனால் அவர்களின் நேரம் சேமிக்கப்படுவதுடன் போக்குவரத்து செலவுகளும் குறைக்கப்படுகின்றன.

# 8. தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற இளைஞர்கள் திறன் பயிற்சி திட்டம் (DDU–GKY)

## 8. தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற இளைஞர்கள் திறன் பயிற்சி திட்டம் (DDU–GKY)

இத்திட்டம் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தின் கீழ் ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு இடையே 60:40 என்ற நிதிப் பகிர்வு அடிப்படையில் ஊரக ஏழை இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கும் திட்டமாகும். 18–35 வயதுடைய இளைஞர்களுக்கு தேர்வு செய்யப்பட்ட நிறுவனங்கள் மூலம் திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது. குறைந்தது 70% பயிற்சியாளர்களுக்கு பணி நியமனம் உத்தரவாதம் வழங்குவது இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

இத்திட்டம் 62% தாழ்த்தப்பட்டோருக்கும் (SC), 3% பழங்குடியினருக்கும் (ST), 16% சிறுபான்மையினருக்கும் (Minorities), 3% மாற்றுத்திறனாளிகளுக்கும் மற்றும் 33% பெண்களுக்கும் (அனைத்து பிரிவுகளையும்

உள்ளடக்கிய) கட்டாய சமூக உள்ளாக்கத்தை கொண்டுள்ளது. பயிற்சிக்குரிய பாடத்திட்டங்கள் தேசிய திறன் தகுதி குழுமத்துடன் (National Skill Qualification Framework) இணைந்த ஒன்றாகும். இத்திட்டத்தில் மென் திறன்களான ஆங்கில அறிவு, அடிப்படை கணினி அறிவு ஆகிய பாடத்திட்டங்களும் சேர்க்கப்பட்டுள்ளதால் வேலைவாய்ப்புக்கான வாய்ப்புகள் இளைஞர்களுக்கு கூடுதலாக உள்ளது.

பயிற்சியில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு அரசு நிறுவன திறன் பிரிவு குழுமங்கள் (Sector Skill Council) மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. 2023-24 ஆம் நிதியாண்டில் 13,065 இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு 7,311 இளைஞர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2,663 இளைஞர்கள்

பல்வேறு பயிற்சி நிறுவனங்களில் சேர்ந்து பயிற்சி பெற்று வருகின்றனர்.

### 8.1 உன்னதி திட்டம் (UNNATI)

தேசிய அளவில் ஊரக வளர்ச்சி திட்ட அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் உன்னதி என்ற திட்டம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்ட பயனாளிகளில் 100 நாட்கள் பணி மேற்கொண்ட குடும்ப உறுப்பினர்களின் இளைஞர்களுக்கு திறன் பயிற்சி வழங்கும் திட்டமாகும். ஊரக இளைஞர்களின் வேலைவாய்ப்பை அதிகரிக்கவும் தொழில் முனைவோர்களை உருவாக்கவும் இத்திட்டம் முக்கியத்துவம் அளிக்கிறது. இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 2021 ஆண்டு முதல் தமிழ்நாட்டில் DDU–GKY திட்டம் மூலமாகவும், RSETI திட்டம் மூலமாகவும் தொடர்ந்து பயிற்சி இலக்குகளை முடித்து முன்னிலையில் உள்ளது.

2023–24 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சகத்தால் 500 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டதில் 670 இளைஞர்களுக்கு திறன் பயிற்சி வழங்கி வேலைவாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**8.2 முன்னாள் மாணவர்கள் சந்திப்பு (Alumni Meet)**

முன்னாள் மாணவர்கள் சந்திப்பு என்னும் நிகழ்வு DDU–GKY திட்டத்தில் பயிற்சி பெற்ற இளைஞர்கள், பயிற்சியின் போது ஏற்படும் சவால்கள் குறித்தும், பயிற்சி முடித்த பின் ஏற்பட்டுள்ள நன்மைகள் குறித்தும், வேலை வாய்ப்புகள் குறித்தும் பணி உயர்வு குறித்தும் கலந்து பேசும் ஒரு இனிய நிகழ்வாகும். பணி நியமன ஆணை வழங்கும் விழா நிகழ்வையடுத்து முன்னாள் மாணவர் சந்திப்பு நிகழ்வு நடத்தப்பட்டத்தில் DDU–GKY திட்டத்தினால் பயிற்சி முடித்து வேலைவாய்ப்பு பெற்ற 1,500

முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டனர். ஏற்கனவே பணியில் இருக்கும் இளைஞர்கள் வழங்கிய பின்னூட்டம் DDU–GKY திட்டத்தினால் தற்போது பயிற்சியில் உள்ள மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

### 8.3 மென் திறன் பயிற்சி (Soft Skill Training)

DDU–GKY பயிற்சி நிறுவனங்களில் ஒரே மாதிரியான ஆங்கில அறிவு மற்றும் மென் திறன் பாடங்கள் கற்பிப்பதை உறுதி செய்வதற்காக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது (TNCDW), தேசிய ஊரக பொருளாதார மாற்றுத் திட்டத்தின் புது முயற்சிகளுக்கான நிதி திட்டத்தின் கீழ் (NRETP) "ஆங்கில அறிவு மற்றும் மென் திறன்களுக்கான பாடத்திட்டத்தினை தரப்படுத்தல்" எனும் திட்டத்தை துவக்கியது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ஆங்கில புலமையில் நன்கு அறியப்பட்ட "பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனம்" தொழில் நுட்ப சேவை

நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனமானது ஆங்கிலம் மற்றும் மென் திறன் பயிற்சிகளுக்கான புதிய பாடத்திட்டங்களை வடிவமைத்துள்ளது. இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு சுமார் 27,600 கிராமப்புற இளைஞர்கள் ஆங்கில அறிவு மற்றும் மென் திறன் பயிற்சி பெற்று பயனடைந்துள்ளனர்.

## 8.4 நிரந்தர வேலைவாய்ப்பு நிறுவனங்கள்

நிரந்தர வேலைவாய்ப்பு நிறுவனங்கள் என்பது ஒரு தனித்துவமான முயற்சியாகும். இது தொழில் நிறுவனங்களின் திறன் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பல்துறை திறன் மேம்பாட்டு சூழலை உருவாக்கும் நோக்கத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பின்தங்கிய கிராமப்புற இளைஞர்களுக்கு நீண்டகால வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சி அளித்து தங்கள் நிறுவனங்களிலேயே வேலைவாய்ப்பையும் வழங்க 4 தொழில்துறை நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**8.5 வாழ்வாதார உதவி மையம் (Livelihood Call Centre)**

DDU–GKY அழைப்பு மையம் தற்போது வாழ்வாதார உதவிமையாக மாற்றப்பட்டு "155330" என்ற புதிய பொது மக்கள் பெரிதும் பயன்பெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் குறியீட்டுடன் தமிழக அரசின் விளம்பரங்களுடனும் செயல்பட்டு வருகிறது. இந்த அழைப்பு மையமானது காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை பொது மக்கள் பயன்பெறும் வகையில், வாழ்வாதார திட்டங்கள் குறித்து அழைப்பவர்களுக்கு விரிவாக விளக்கங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கும் வகையில் செயல்பட்டு வருகிறது.

# 9. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (TNULM)

## 9. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (TNULM)

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமானது, நகர்ப்புற ஏழைகளிடையே சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, அவர்களின் வறுமையையும் நலிவு நிலையையும் குறைத்து, சுய வேலை வாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுடன் கூடிய வேலை வாய்ப்புகளுக்கு வழி வகுத்து, அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினை குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்துவதும், நீடித்த நிலைத்த தன்மை அடையச் செய்வதாகும்.

நகர்ப்புற உறைவிடமற்றோருக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய உறைவிடத்தை ஏற்படுத்தித் தருதல், நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு அவர்களின் வியாபாரத்தினை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் பொருத்தமான இடம் ஒதுக்கீடு செய்தல், நிதி

அமைப்புகள் மூலம் கடன் வசதி ஏற்படுத்துதல், சமூக பாதுகாப்பு அளித்தல் மற்றும் திறன் வளர்ப்பு மூலம் வளர்ந்து வரும் சந்தை வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்டு, அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட உதவுதல் போன்றவற்றை முக்கிய இலக்காகக் கொண்டு இவ்வியக்கம் , செயல்படுகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் **(TNULM)** ஆரம்ப கால கட்டத்தில் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் செயல்படுத்தப்பட்டது, நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு திட்டங்களை செயல்படுத்துவதில் மிகையான அனுபவம் இருப்பதால் 2016 – 17 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு மாற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 9.1 தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் திட்டக்கூறுகள்

### அ. சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID)

நகர்ப்புற ஏழைகள் மற்றும் நலிவுற்றோரை ஒருங்கிணைத்து சுய உதவிக்குழு மற்றும் கூட்டமைப்புக்குள் கொண்டு வருவதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். மேற்கண்ட குடும்பங்களில் மகளிரை ஒன்று திரட்டி குறைந்தது 10 முதல் 20 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப்படுகின்றன.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், குறிப்பாக தாழ்த்தப்பட்டோர், பழங்குடியின மக்கள், சிறுபான்மையினர், மகளிரைத் தலைவியாகக் கொண்ட குடும்பங்கள். மாற்றுத்திறனாளிகள், விதவைப் பெண்கள், மிகவும் நலிவுற்றோர், தெருவோர வியாபாரிகள், குப்பை சேகரிப்பவர்கள்,

வீட்டுவேலைசெய்பவர்கள் மற்றும் கட்டிடத்தொழிலாளர்கள் ஆகியோரை ஒன்று திரட்டி சுய உதவி குழுவிற்குள் கொண்டு வருவதில் தனிக்கவனம் செலுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுய உதவிக்குழுக்கள் நன்றாக செயல்படுவதற்கு பின்பற்றபட வேண்டிய தவிர்க்க இயலாத ஐந்து குறிக்கோள்கள். அவைகளாவன **அ)** முறையான கூட்டங்கள் **ஆ)** முறையான சேமிப்பு **இ)** முறையான உள்கடன் வழங்குதல் **ஈ)** முறையான கடன் திருப்பம் மற்றும் **உ)** நாளது தேதி வரை கணக்குகளை பதிவேடுகளில் பதிவு செய்தல் போன்றவைகளாகும்.

சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாட்டின்கீழ் பின்வரும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) சுய உதவிக் குழு அமைத்தல் மற்றும் சுயஉதவிக்குழுக்களுக்கு சுழல்நிதி வழங்குதல்**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ், புதிய சுய உதவிக்குழுக்கள் அமைத்து பயிற்சி வழங்கப்பட்டு, 3 மாதங்கள் முடிவடைந்த பின்பு, அவற்றின் செயல்பாட்டு மதிப்பீட்டின் அடிப்படையில், அக்குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கப்படுகிறது. குழுவின் மூலதன நிதியை உயர்த்துவதற்கும், உறுப்பினர்களுக்கு உள்கடன் வழங்குவதை அதிகப்படுத்துவதற்கும் மற்றும் வங்கிக் கடன் பெறுவதற்கும் ஒரு குழுவிற்கு ரூ 10,000/– வீதம் வழங்கப்படுகிறது.

2023 – 24 ஆம் நிதியாண்டில் 15,000 சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டு, இதுவரை 9,474 குழுக்களுக்கு மொத்தம் 9.47 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

**(ii) பகுதி அளவிலான கூட்டமைப்புகள் அமைத்தல் மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கு சுழல் நிதி வழங்குதல்**

பகுதி அளவிலான கூட்டமைப்பு குறைந்தபட்சம் 10 சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து, வார்டு அளவில் ஏற்படுத்தப்படுகிறது. பகுதி அளவிலான கூட்டமைப்பின் கீழ் உள்ள சுய உதவி குழுக்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் குறைந்த வட்டியில் வங்கி கடன் பெற்றுத் தருவது பல்வேறு வாழ்வாதார செயல்பாடுகளை மேற்கொள்ள மற்றும் பல்வேறு திட்டங்களில் ஒருங்கிணைப்பு மற்றும் விழிப்புணர்வு செயல்பாடுகளில் பங்கு பெறுவதற்கும் வழிகாட்டுகிறது. ஒவ்வொரு பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கு ஆதார நிதியாக ரூ.50,000/– வீதம் சுழல் நிதி ஒரு முறை மட்டும் வழங்கப்படுகிறது.

2023 – 24 ஆம் நிதியாண்டில் 807 பகுதி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. அவற்றுள் இதுவரை 320 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு மொத்தமாக 1.60 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

**(iii) நகர அளவிலான கூட்டமைப்புகள் அமைத்தல்**

பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டு நகர அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுகிறது. இக்கூட்டமைப்பின்கீழ் வரும் பகுதி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்கு பெரிய அளவிலான தலையீடுகள் மற்றும் முன்னெடுப்புகள் தேவைப்படும்போது, தீர்வு காணவும் மற்றும் வழிகாட்டும் அமைப்பாகவும் செயல்படுகிறது.

**(iv) நகர்ப்புற வாழ்வாதார மையங்கள்**

நகர்ப்புற ஏழைகளின் உற்பத்தி மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்கு தேவையான ஒரு வலுவான தளத்தை ஏற்படுத்தி தருகிறது மற்றும் அனைத்து நகர்ப்புற மக்களுக்கு தேவையான முறைசாரா துறைகளின் சேவைகளை எளிதில் ஒரே இடத்தில் கிடைக்க வழிவகை செய்வதன் மூலம் ஓரிட வணிக மையமாகவும் செயல்படுகிறது.

நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் வேலைவாய்ப்பு மற்றும் திறன் வளர்ப்புகள் குறித்து உரிய தகவல்கள் தேடுபவர்களுக்கு உதவும் ஆதார வள மையமாகவும் திகழ்கிறது. இதுவரை 82 நகர வாழ்வாதார மையங்கள் மாநிலம் முழுவதும் செயல்பாட்டில் உள்ளன.

**ஆ) திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி**

வாழ்வாதார மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்பு போன்ற ,திட்டங்களை செயல்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப உதவி வழங்க மாநில மற்றும் மாவட்ட அலுவலர்கள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு, கூட்டமைப்பு மற்றும் சுயஉதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு தேவையின் அடிப்படையில் விரிவான பயிற்சி வழங்கப்படுகிறது.

சுய உதவிக்குழுக்கள், அதன் கூட்டமைப்புகளுக்கு அவர்களின் கடமை மற்றும் பொறுப்புகள், புத்தகப்பராமரிப்பு மற்றும் கணக்குகள், வங்கி இணைப்பு, நுண்கடன் திட்டமிடல், நுண்நிதி முதலீட்டு முறை போன்ற பல்வேறு வகையான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**அட்டவணை எண்.3**

**வழங்கப்படும் பயிற்சி விவரங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| **அ)** | சுய உதவிக்குழு ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகள் பயிற்சி | 3 தொகுப்புகள் | 3 நாட்கள் |
| **ஆ)** | சுய உதவிக்குழு உறுப்பினர் பயிற்சி | 4 தொகுப்புகள் | 2 நாட்கள் |
| **இ)** | பகுதி அளவிலான கூட்டமைப்புகள் / நகர அளவிலான கூட்டமைப்புகளுக்கு நிதி மேலாண்மை பயிற்சி | 2 தொகுப்புகள் | 4 நாட்கள் |

**இ) சுய வேலைவாய்ப்புத்திட்டம் (SEP)**

இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டு நெறிமுறையின்படி குறைவான மற்றும் சரியான வட்டி விகிதத்தில் உரிய நேரத்தில் தேவைக்கேற்ப வங்கி கடன் பெறுவதின் மூலம் மாநில அளவில் நகர்ப்புற மகளிரின் பொருளாதார மேம்பாடு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டமானது, நகர்ப்புற தனி நபர் ஏழை மற்றும் சுய உதவிக்குழுக்களுக்கு அவரவர் திறன் மற்றும் உள்ளூர் நிலைமைக்கு ஏற்றார்

போல் சுய வேலைவாய்ப்பு மற்றும் சிறு தொழில் தொடங்குவதற்கு நிதியுதவி அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தங்கள் தகுதிக்கு குறைவான வேலையிலுள்ளோர் மற்றும் வேலை வாய்ப்பில்லாதோர் அவரவர் தேவைக்கு ஏற்ப உற்பத்தி, சேவை மற்றும் வியாபாரம் தொடர்பான சிறு நிறுவனங்கள் தொடங்க இத்திட்டமானது ஊக்கமளிக்கிறது.

**(i) சுய வேலைவாய்ப்புதிட்டம் – வங்கி இணைப்பு (SEP–BL)**

நகர்ப்புற சுய உதவிக் குழுக்கள் வங்கியை எளிதில் அணுகி நிதி தொடர்பான சேவைகளை பெறுவதற்கு ஏதுவாக வழிவகை செய்து தருவதற்கு தேவையான முன்னெடுப்பாக சுய உதவி குழு வங்கி இணைப்பு திட்டம் செயல்பட்டு, ஏழைகள் கடன் பெறும் உரிமையை உறுதிபடுத்துகிறது. இத்திட்டத்தின் வாயிலாக மகளிர் சுயஉதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு வங்கிகளுடன் வலுவான

உறவை கட்டமைப்பதன் மூலம் தொடர்ந்து குறைந்த வட்டி விகிதத்தில் வங்கி கடன் இணைப்பை உறுதி செய்வதற்கும் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு தேவையான கூடுதல் நிதியை பெறுவதற்கும் வழிவகை செய்கிறது. இத்திட்டத்தில், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கியுடன் தொடர்பு கொண்டு இந்திய ரிசர்வ் வங்கி வகுத்த வழிகாட்டு முறைகளின் படி, வட்டி மானியத்துடன் கூடிய கடன் பெற வழி வகை செய்யப்படுகிறது.

2023-24 ஆம் ஆண்டில் மொத்தம் 1,78,805 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.10.003.42 கோடி வங்கி இணைப்பாக பெற்றுத் தரப்பட்டுள்ளது.

**(ii) குழு சுய வேலைவாய்ப்புதிட்டம் (SEP-G)**

சுய உதவிக்குழுவைச் சார்ந்த குறைந்தது இரண்டு உறுப்பினர்கள் அல்லது நகர்ப்புற

ஏழைகள் குழுவாக இணைந்து சுய வேலைவாய்ப்பிற்கான சிறுதொழில் துவங்குவதற்கு ரூ.10 இலட்சம் வரையில் வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெறுவதற்கு இத்திட்டம் வழிவகை செய்கிறது.

2023 – 24 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 4,024 தொழில் குழுக்களுக்கு 144.87 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**(iii) தனிநபர் சுய வேலைவாய்ப்புத்திட்டம் (SEP –I)**

இத்திட்டத்தின் மூலம் நகர்ப்புற ஏழைகள், தனிநபராக சுய வேலைவாய்ப்பிற்காக நுண் நிறுவனத்தை நிறுவுவதற்கு ரூ.2 இலட்சம் வரையில் வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெறுவதற்கு வழிவகை செய்கிறது.

2023 – 24 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 6,183 தனிநபர்களுக்கு 40.34 கோடி ரூபாய் வங்கிக்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**(iv) வட்டி மானியம்**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், நகர்ப்புற ஏழைகளுக்கு சரியான வட்டி விகிதத்தில் வங்கிக் கடன் வழங்குவதை ஊக்குவிக்கும் விதமாக சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் அளிக்க பைசா இணைய தளம் வாயிலாக வழிவகை செய்கிறது. வட்டி மானியம் என்பது ஒரு வங்கியின் நடைமுறையில் உள்ள வட்டி விகிதத்தில் 7 சதவீதத்திற்கும் மேலுள்ள வட்டி சுய உதவிக் குழுக்களுக்கு திரும்ப வழங்கப்படுகிறது. மேலும், தங்களது கடன் தொகையினை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கூடுதலாக 3 சதவிகிதம் வட்டி மானியம் வழங்கப்படுகிறது .

2023 – 24 ஆம் ஆண்டில் 26.24 கோடி ரூபாய் சுய வேலை வாய்ப்புத் திட்ட

பயனாளிகளுக்கு வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**(ஈ) தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. சுய வேலை வாய்ப்பு திட்டத்தில் பயன்பெற்ற தனிநபர் மற்றும் குழு தொழில் முனைவோர்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில், தொழில் முனைவோர் பற்றிய விழிப்புணர்வு, தொழில் முனைவோர் திறன் மேம்பாடு, தொழில் திட்டம் தயாரித்தல், பிற அரசுத் துறை திட்டங்களிலிருந்து நிதி திரட்டுதல் மற்றும் சந்தைபடுத்துதல் தொடர்பாக பயிற்சி அளிக்கப்படுகிறது.

2023-24 ஆம் ஆண்டில் 15,000 தொழில் முனைவோர்களுக்கு, தொழில் முனைவோர் பயிற்சி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

## 9.2 கூட்டாண்மை மற்றும் பிற துறை ஒருங்கிணைப்பு

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் பிறதுறைகளுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் இயக்கத்தின் முக்கிய நோக்கமான வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாடு அடைவதற்கு துணைபுரிகிறது.

- உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களை மேம்படுத்தும் திட்டத்தில் (PMFME) உணவு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள நகர்ப்புற சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் உணவு உற்பத்தி தொடர்பான நுண் நிறுவனங்களை நிறுவுவதற்கு தேவையான நிதியை பெறுவதில் முக்கிய பங்குதாரர்களாக விளங்குகின்றனர்.
- மக்களைத் தேடி மருத்துவத் திட்டம். தமிழ்நாட்டின் 649 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் தொற்றா நோய்களை

கண்டறிதல் மற்றும் கண்காணித்தல் பணியினை சுயஉதவிக்குழுவைச் சார்ந்த 2,256 மகளிர் சுகாதார தன்னார்வலர்களால் மேற்கொள்ளப்படுகிறது.

- தூய்மை பாரத இயக்கம் – 2.0 (நகர்ப்புறம்) திட்டத்தின்கீழ் குடியிருப்பு அளவில் திட மற்றும் திரவ கழிவு மேலாண்மையினை, செயல்படுத்துவதற்கு வீடுவீடாக விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் நகர்ப்புற சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர்.
- சென்னை பெருமாநகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள மறுகுடியமர்வு குடியிருப்புகளில் உள்ள மகளிர்களை ஒருங்கிணைத்து, சமுதாய அமைப்புகளை உருவாக்கி, அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதில் தமிழ்நாடு நகர்ப்புற

வாழ்வாதார இயக்கம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

- நகர்ப்புற சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பேரூராட்சி பகுதிகளில் உள்ள பள்ளிகளில் 'மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் மைய பொறுப்பாளராக செயல்பட்டு வருகின்றனர்.

கீழ்க்கண்ட திட்டங்கள் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் இத்திட்டங்களை ஒருங்கிணைத்து நிதியுதவி வழங்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1. நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரம் **(SUSV)**
2. நகர்ப்புற வீடற்றோருக்கு உறைவிடம் **(SUH)**

# 10. தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP) @ வாழ்ந்து காட்டுவோம் திட்டம் 2.0 (VKP)

## 10. தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP) @ வாழ்ந்து காட்டுவோம் திட்டம் 2.0 (VKP)

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் என்பது ஊரக வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டமாக தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் கிராமப்புறத் தொழில்களை ஊக்குவித்தல், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துதல், மகளிர் தொழில்முனைவோர் மூலம் கிராமப்புறங்களில் நிலையான தொழில் நிறுவனங்களை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் 31 மாவட்டங்களிலுள்ள (சென்னை, தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், தருமபுரி, கன்னியாகுமரி மற்றும் திருப்பத்தூர் தவிர) 120 வட்டாரங்களில் உள்ள 3,994 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது.

**திட்ட மேம்பாட்டு நோக்கங்கள்**

தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் ஊரகத் தொழில் முனைவுகளை உருவாக்குதல், நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலை வாய்ப்பினை உருவாக்குதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

**நிதி**

உலக வங்கி மற்றும் தமிழ்நாடு அரசு 70:30 என்ற விகிதத்தில் ரூ.919.73 கோடி (119.01 மில்லியன் அமெரிக்க டாலர்) மதிப்பிடப்பட்ட செலவினத்தில் இந்த திட்டத்திற்கு நிதியளிக்கிறது. உலக வங்கியின் கடன் உதவி ரூ.643.81 கோடி (83.31 மில்லியன் அமெரிக்க டாலர்) மற்றும் தமிழக அரசின் (GoTN) நிதியுதவி ரூ.275.92 கோடி (35.70 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும்.

## 10.1 திட்டத்தின் முக்கியக் கூறுகள்

இந்த திட்டம் பின்வரும் நான்கு முக்கிய கூறுகளை உள்ளடக்கியது:

i) ஊரகத் தொழில் முனைவுக்கு ஏற்ற சூழல் மேம்பாடு
ii) தொழில் முனைவுக்கான திட்ட நிதி வழங்குதல்
iii) திறன் மற்றும் வேலை வாய்ப்புகள்
iv) திட்ட மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மைக் கட்டமைப்பு (ESMF), பாலின சமத்துவம், தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பம் (ICT), அறிவுசார் மேலாண்மை மற்றும் தகவல் தொடர்பு (KMC), கொள்முதல் மற்றும் ஒப்பந்தம் (P&C) ஆகியவை திட்டத்தின் அனைத்து கூறுகளுடனும் இணைந்து செயல்படும்.

## 10.2 திட்டத்தின் முக்கிய செயல்பாட்டு நுணுக்கங்கள்

i) நிறுவனங்களை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்பம் மற்றும் நிதி சார்ந்த உதவிகள்
ii) சமுதாயத் திறன் மற்றும் பண்ணை பள்ளிகள்
iii) தொழில்முனைவோருக்கான திட்ட நிதி வழங்கல்
iv) வணிகப் புதுமைக் கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல்
v) நிறுவனங்களை நிறுவுதல்.
vi) தொழில்முனைவோருக்குத் திறன் மேம்பாடு
vii) கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

**அ. நிறுவனங்களை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்பம் மற்றும் நிதி சார்ந்த உதவிகள்**

இத்திட்டத்தின் மூலம் இரண்டு வகையான நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றன

i) குழு நிறுவனங்கள்
ii) தனிநபர் நிறுவனங்கள்

**குழு நிறுவனங்கள்**

குழு நிறுவனங்களுக்கு நிர்வாக மேலாண்மை, புத்தகப் பராமரிப்பு, நிதி மேலாண்மை, உற்பத்தி பொருள்களை ஒருங்கிணைத்தல் போன்ற தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படுகிறது. மேலும், உற்பத்தியாளர் குழுக்களுக்கு, சமுதாய பண்ணை பள்ளிகள் மூலம் தொழில்நுட்ப ரீதியிலான உதவிகள் வழங்கப்படுகிறது.

ஒரே துறையில் கூட்டாகப் பணியாற்றத் தயாராக இருக்கும் நபர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு சமுதாய திறன் பள்ளிகள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்த பிறகு, பயிற்சி பெற்றவர்களை ஒன்றிணைக்கப்பட்டு, தொழிற்குழுவாக உருவாக்கப்படுகின்றது.

துவக்க நிதி மானியமாக வழங்குதல், வங்கிகடன் இணைப்பை ஏற்படுத்துதல், உற்பத்தி

பொருள்களுக்கு சந்தை இணைப்பை ஏற்படுத்துதல் ஆகியவை குழுநிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் நிதி மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த உதவிகளாகும்.

**குழு நிறுவனங்களுக்கு துவக்க நிதி**

குழு நிறுவனங்களுக்கு உற்பத்தியை அதிகரிக்கவும், உள்ளீடு செலவைக் குறைக்கவும், தரத்தை மேம்படுத்தவும், நிறுவனங்களின் வருமானம் மற்றும் இலாபத்தை அதிகரிக்கவும் குழு நிறுவனங்களுக்கு துவக்க நிதி மானியமாக வழங்கப்படுகிறது.

(அ) **தொழிற்குழுக்கள்** – 10 முதல் 30 உறுப்பினர்கள் கூட்டு உரிமை மற்றும் வணிக நடவடிக்கைகளின் மீது பகிரப்பட்ட வளங்கள் மற்றும் இலாபத்துடன் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளனர். பொருளாதார மேம்பாட்டிற்காகவும், உற்பத்தி செலவைக் குறைக்கவும், தரத்தை மேம்படுத்தவும் மற்றும்

வருவாயை அதிகரிக்கவும் ஒன்றுபடுகின்றனர். தொழிற்குழுக்கள் உரிய தகுதியை அடைந்ததின் அடிப்படையில் ரூ.75,000 துவக்க நிதி மானியமாக வழங்கப்படுகின்றன.

2023–24 ஆம் நிதியாண்டு வரை, 1000 தொழிற்குழுக்களுக்கு துவக்க நிதியாக ரூ.9.30 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**(ஆ) உற்பத்தியாளர் குழுக்கள்** – 30 முதல் 150 உற்பத்தியாளர்ளை குழுவாக ஒன்றிணைத்து உற்பத்தி திறனை அதிகரித்தல், விளை பொருட்களை ஒன்று திரட்டுதல் மற்றும் இதர கூட்டு நடவடிக்கைகளுக்காக அமைக்கபடுகின்ற ஒரு குழுவாகும். முக்கிய தகுதிகளை அடைந்ததின் அடிப்படையில் உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.75,000 துவக்க நிதி மானியமாக வழங்கப்படுகிறது.

2023–24 நிதியாண்டு வரை, 5000 உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.50.73 கோடி துவக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

(இ) **உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் –** உற்பத்தியாளர் கூட்டமைப்பு என்பது உற்பத்தியாளர் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது விளைபொருட்களை ஒருங்கிணைத்தல், மதிப்பு கூட்டுதல், சந்தைப்படுத்துதல் மற்றும் உறுப்பினர்களுக்கு சேவையை வழங்குதல் ஆகியவற்றிற்காக முறையான உயர்நிலை ஒருங்கிணைப்பு ஆகும். உரிய தகுதிகளை எய்தியதற்குப் பின் இக்கூட்டமைப்புகளுக்கு ரூ.30.00 லட்சம் துவக்க நிதி நான்கு தவணைகளில் வழங்கப்படுகிறது. 300 முதல் 3,000 உற்பத்தியாளர்கள் வரை ஒருங்கிணைத்து உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் உருவாக்கப்படுகிறது. தற்போது நடைமுறையில் உள்ள 19 உற்பத்தியாளர் கூட்டமைப்புகள்

மற்றும் 34 புதிய உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் இத்திட்டத்தால் அடையாளம் காணப்பட்டுள்ளன. இக்கூட்டமைப்புகள் அனைத்தும் இந்திய நிறுவனங்கள் சட்டம், 2013–ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2023–24 ஆம் நிதியாண்டு வரை, 53 உற்பத்தியாளர் கூட்டமைப்புகளுக்கு ரூ.14.50 கோடி துவக்க நிதி உதவி அளிக்கப்பட்டது.

2024–25 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் ரூ.0.50 கோடி உற்பத்தியாளர் கூட்டமைப்புக்கு துவக்க நிதி உதவியாக அளிக்கப்படும்.

**தனிநபர் தொழில் நிறுவனம்**:

தனிநபர் நிறுவனமானது ஒரு தனிநபர் அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட தனிநபர்களுக்குச் சொந்தமான நிறுவனமாகும். தனிப்பட்ட நிறுவனங்கள், நுண், குறு மற்றும் சிறு தொழில்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

ரூ.5 லட்சம் வரை முதலீடு செய்யும் நிறுவனங்களை நுண் நிறுவனங்கள் என்றும், ரூ.5 முதல் 15 லட்சம் வரையிலான முதலீடு செய்யும் நிறுவனங்களை குறு நிறுவனங்கள் என்றும், ரூ.15 முதல் 30 லட்சம் வரையிலான முதலீடுகள் செய்யும் நிறுவனங்களை சிறு நிறுவனங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இந்த நிறுவனங்கள் திட்டத்தின் இணை மானிய திட்டத்துடன் உதவப்படுகின்றன.

**ஆ. சமுதாயத் திறன் மற்றும் பண்ணைப் பள்ளிகள்**

ஏழை எளிய மக்களின் திறமையை மேம்படுத்துவதற்கும் வாழ்வாதார மேம்பாட்டிற்கும், வருமானத்தை உயர்த்துவதற்கும் தொழில் திறன்மேம்பாடு என்பது இன்றியமையாததாகும். ஊரகப் பகுதியில் உள்ள மக்களுக்கு அவர்களின் பகுதியிலேயே பயிற்சி அளிக்க, அப்பகுதியிலேயே உள்ள திறன் வாய்ந்த தொழில் வல்லுநர்கள்

மூலம் சமுதாயத் திறன் பள்ளிகள் மற்றும் சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் அமைக்கப்படுகின்றன. பாரம்பரிய மற்றும் அதிக வருமானம் ஈட்டக்கூடிய கைவினைத் தொழில்களைச் செய்பவர்கள் மற்றும் வல்லுநர்களைத் தேர்வு செய்து, குறைந்தபட்ச உட்கட்டமைப்புகளுடன் ஊராட்சி / ஒன்றிய அளவில் சமுதாயத் திறன் பள்ளிகளை அமைத்து, ஊரகப் பகுதிகளில் திறன் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

**(i) சமுதாயத் திறன் பள்ளிகள் (CSS)**

உள்ளூர் மற்றும் பாரம்பரிய வருமானம் ஈட்டக்கூடிய திறன்களின் அடிப்படையில், தேவையான உள்கட்டமைப்புடன் தொழில் செய்யக்கூடிய உள்ளூர் செயல் வல்லுநர்கள்/ நிபுணர்கள் அல்லது தொழில்முனைவோர்களை முதன்மை பயிற்சியாளர்களாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் (PLF) மூலம் தேர்வு

செய்யப்படுகிறார்கள். இந்தப் பயிற்சியாளர்கள், அதே கிராமத்தில்/வட்டாரத்தில் சமுதாயத் திறன் பள்ளிகளை அமைத்து, ஊதியம் மற்றும் சுயதொழில் தொடங்குவதற்கு, ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு பல்வேறு தொழிற்பயிற்சிகளை அளிக்கின்றனர். சமுதாயத் திறன் பள்ளிகள் அமைக்க ஏதுவாக இத்திட்டத்தின் மூலம் ரூ.70,000 முதல் ரூ.1.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. இதில் பயிற்றுநரின் ஊதியம், பயிற்சிக் கருவிகள், சீருடைகள் போன்றவைகள் அடங்கும்.

2023-24 ஆம் நிதியாண்டு வரை, 2,526 சமுதாயத் திறன் பள்ளிகள் அமைக்கப்பட்டு, 51,193 கிராமப்புற இளைஞர்களுக்கு ரூ.19.30 கோடியில் திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது, இதில் 324 கொத்தனார் பயிற்சி, 259 தையல் பயிற்சி, 233 எலக்ட்ரீசியன் பயிற்சி, 140 இரு சக்கர வாகன

பழுது நீக்கப்பயிற்சி, 115 வெல்டிங் பயிற்சி, 53 பிளம்பிங் பயிற்சி, 45 செல்போன் பழுது பார்ப்பு பயிற்சி, 9 படகு பழுது பார்க்கும் பயிற்சிப் பள்ளிகள் மற்றும் பிற அடங்கும்.

2023–24 ஆம் நிதியாண்டில் ரூ.7.16 கோடி நிதியுதவியின் மூலம் 907 சமுதாய பயிற்சி பள்ளிகள் அமைக்கப்பட்டு 16,809 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

**(ii) சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் (CFS)**

சமுதாயப் பண்ணைப் பள்ளிகள், பயிர்களின் உற்பத்தி, உற்பத்தித்திறன், பயிர் பல்வகைப்படுத்துதல், கால்நடை மற்றும் கோழிவளர்ப்புகளை மேம்படுத்தும் பொருட்டு அமைக்கப்படுகின்றன. இப்பள்ளிகள், பலவருட அனுபவத்தின் மூலம் நிபுணத்துவம் பெற்ற, புதிய யுக்திகள், தொழில்நுட்ப அறிவு மற்றும் பிற விவசாயிகளுக்கு கற்றுக்கொடுக்கும் திறன்

கொண்ட முன்னோடி விவசாயிகளால் வழிநடத்தப்படுகிறது.

வல்லுநர்கள் மற்றும் முன்னோடி விவசாயிகள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் (TNAU) / வேளாண் அறிவியல் மையம் (KVK) / தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (TANUVAS) மூலம் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. இவர்கள் மற்ற விவசாயிகளுக்கு தொடர்ச்சியான வழிகாட்டுதல்களை வழங்குகின்றனர். சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் அமைக்க ஏதுவாக ரூ.70,000 முதல் ரூ.1.00 இலட்சம் வரை நிதி இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. இதில் பயிற்றுநரின் ஊதியம், பயிற்சிக் கருவிகள், செயல் விளக்கப் பண்ணைகளை நிறுவுதல் போன்றவைகள் அடங்கும்.

2023–24 ஆம் நிதியாண்டு வரை, 6000 சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் அமைக்கப்பட்டு, 1,82,337 உற்பத்தியாளர்குழு உறுப்பினர்களுக்கு ரூ.51.01 கோடி செலவில் வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த நடவடிக்கைகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது. இதில் 3,075 பயிர்சாகுபடி, 1,920 கறவைமாடு பராமரிப்பு, 547 ஆடு வளர்ப்பு, 458 புழக்கடை கோழி வளர்ப்பு போன்ற பயிற்சிகள் அடங்கும்.

2023–24ம் நிதியாண்டில் ரூ.5.26 கோடி நிதியுதவியின் மூலம் 608 சமுதாய பண்ணைப் பள்ளிகள் அமைக்கப்பட்டு 18,209 உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

**iii. புலம்பெயர்ந்தோர் ஆதரவு மையம் (MSC)**

புலம்பெயர்ந்தோர் ஆதரவு மையமானது, புலம் பெயர்ந்தோருக்கு தங்குமிட வசதி, வேலைவாய்ப்புகள் உட்பட, அவர்களின் வளர்ச்சிக்கு தேவையான சேவைகளைப் பெற

உதவுகிறது. செங்கல்பட்டு மாவட்டம், சிங்கபெருமாள் கோவிலில் 40 பேர் தங்கக்கூடிய வகையில் ஒரு இடம்பெயர்வு ஆதரவு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதுநாள்வரை, 173 நபர்கள் இம்மையத்தின் சேவைகளைப் பயன்படுத்தியுள்ளனர். மேலும் ஒரு புலம்பெயர்ந்தோர் ஆதரவு மையம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ளது.

**இ. தொழில்முனைவுக்கான திட்ட நிதி வழங்கல்**

தனிநபர் மற்றும் குறுநிறுவனங்களின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்த முறைப்படுத்தப்பட்ட நிதி நிறுவனங்களின் மூலம் கடனுதவி அளிக்கப்படுகிறது. நிதி நிறுவனங்களுடனான இணைப்புகள் மூலம் வணிகத் திட்டங்களுக்கு நிதி வழங்குவதற்காக, இணை மானிய நிதி திட்டம் (MGP) என்ற திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### (i) இணை மானிய நிதித் திட்டம் (MGP)

இணை மானிய நிதி திட்டம் (MGP) என்பது தமிழ்நாட்டின் கிராமப்புற வளர்ச்சியை உள்ளடக்கியதும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதை நோக்கமாகவும் கொண்டுள்ளது. இணை மானிய நிதி திட்டம் (MGP) என்பது நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதில் தேவை மற்றும் விநியோக இடைவெளியை நிரப்ப உருவாக்கப்பட்ட ஒரு நிதியாகும். இது கிராமப்புற தொழில்முனைவோருக்கு முறையான வங்கியிணைப்பினை பெறுவதை எளிதாக்குகிறது. நிதி நிறுவனங்களிடமிருந்து வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தும் தொழில்முனைவோரை இணை மானிய நிதி திட்டம் (MGP) ஊக்குவிக்கும்.

இணை மானிய நிதித் திட்டம் (MGP) முதல் தலைமுறை தொழில்முனைவோர், மகளிர்

தலைமையிலான வணிகங்கள்/ நிறுவனங்கள் தொழிற் குழுக்கள், உற்பத்தியாளர் கூட்டமைப்பு, மாற்றுத்திறனாளிகள் தலைமையிலான நிறுவனங்கள் மற்றும் நிதித்துறைகளில் சவாலாகக் கருதப்படும் பிற வகை நிறுவனங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இணை மானிய நிதித் திட்டத்தின் (MGP) கீழ், 6,680 நிறுவனங்களுக்கு ஆதரவாக ரூ.94.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இது விகிதாசாரப்படி ரூ.300.00 கோடி வரை கடன் இணைப்புகளை அதிகரிக்கும். கடன் தொகையில் 70% முறையாக திருப்பிச் செலுத்தினால், கடன் வாங்கியவர் 30% மானியத்திற்கு தகுதிபெறுவார்.

இணை மானிய நிதி திட்டமானது 6,000 நுண், 500 குறு, 120 சிறு தனிநபர் நிறுவனங்கள், 50 தொழிற்குழுக்கள் மற்றும் 10 உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் ஆகியவற்றிற்கு வழங்கப்படும். நுண், குறு மற்றும் சிறு தொழில்

நிறுவனங்களுக்கு சராசரியாக ரூ.1.00 லட்சம், ரூ.3.00 லட்சம் மற்றும் ரூ.5.00 லட்சம் மானியப் பகுதியாக முறையே அனுமதிக்கப்படும். தொழிற்குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் முறையே ரூ.1.50 லட்சம் மற்றும் ரூ.15.00 லட்சம் மானியப் பகுதியாக அனுமதிக்கப்படும்.

2023-24 ஆம் நிதியாண்டு வரை, 5,904 தனிநபர் நிறுவனங்களுக்கு இணை மானிய நிதி ரூ.62.27 கோடியும், 81 தொழிற் குழுக்களுக்கு ரூ.0.86 கோடியும், ஒரு உற்பத்தியாளர் கூட்டமைப்புக்கு ரூ.0.22 கோடி மொத்தத்தில், 5,986 நிறுவனங்களுக்கு ரூ.63.35 கோடி ஆதரவு அளிக்கப்பட்டு, முறைப்படுத்தப்பட்ட நிதி நிறுவனங்களிடமிருந்து ரூ.190.05 கோடி கடன்களைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**(ii) நுண் தொழில் நிறுவன நிதி**

நுண் தொழில் நிறுவன நிதி (Nano Enterprise Financing Fund – NEFF) என்பது புதிய மற்றும் ஏற்கனவே உள்ள நிறுவனங்களை ஊக்குவிக்கும் நோக்கத்திற்காக மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்காக உருவாக்கப்பட்ட பிரத்தியேகமான கடன் உதவி திட்டமாகும்.

கிராமப்புறங்களில் உள்ள நுண் தொழில் நிறுவனங்கள், செயல்பாட்டு மூலதனப் பற்றாக்குறை மற்றும் மாறிவரும் வணிகச் சூழல் ஆகியவற்றால் சிரமங்களை எதிர்கொள்கின்றன. கோவிட் தொற்றுநோய் மற்றும் தொடர்ச்சியான ஊரடங்கின் காரணமாக கிராமப்புற நிறுவனங்கள் அதிகமாக பாதிப்படைந்தன. இந்த சூழலில், வாழ்ந்து காட்டுவோம் திட்டமானது, 3994 கிராமத்தில் உள்ள 89,041 சுய உதவிக் குழு மற்றும் அவர்களின் குடும்ப பயனாளிகளுக்கு

ரூ.259.75 கோடி, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு (PLF) மற்றும் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் (VPRC) மூலம் நுண் தொழில்கள் நசிந்து விடாமல் காக்க நுண் நிறுவன நிதியை மென் கடனாக (Soft Loans) வழங்கியது. இந்த கடன் தொகையானது பயனாளர்களால் திருப்பிச் செலுத்தப்பட்டு வருகின்றது. மார்ச், 2024 நிலவரப்படி, ரூ.221.16 கோடி பயனாளர்களால் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு (PLF) மற்றும் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திடம் (VPRC) திருப்பிச் செலுத்தும் தொகையானது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் (PLF) ஒன்றாகத் தொகுக்கப்பட்டு, **நுண் தொழில் நிறுவன நிதி(NEFF)** எனப் பெயரிடப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 28 ஜூன் 2023 அன்று இத்திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்கள். நுண் தொழில் நிறுவன

நிதியானது ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளால் (PLF) நிர்வகிக்கப்படுகிறது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பானது தொழில்முனைவோர் தேர்வு, கடன் மதிப்பீடு, ஆவணங்கள் சரிபார்த்தல் மற்றும் கடன் வழங்குதல் போன்ற அனைத்து நெறிமுறைகளைப் பின்பற்றி புதிய மற்றும் ஏற்கனவே உள்ள நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக நுண் தொழில் நிறுவன நிதி கடன் வழங்குகிறது. மார்ச் 2024 நிலவரப்படி, 10,104 தொழில்முனைவோருக்கு நுண் நிறுவனங்களைத் தொடங்க அல்லது மேம்படுத்துவதற்காக ரூ.53.26 கோடி நுண் தொழில் நிறுவன நிதி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**ஈ. வணிகப் புதிய முயற்சிகளை ஊக்குவித்தல்**

வணிக புதிய முயற்சிகள் (Business Innovation) என்பது எந்தவொரு தொழில் அல்லது

நிறுவனமும் புதிய யோசனைகள், பணிப்பாய்வுகள், சேவைகள், தயாரிப்புகள் மற்றும் வழிமுறைகளை அறிமுகப்படுத்தும் ஒரு செயல்முறையாகும். வணிக புதிய முயற்சிகள் பொதுவாக தொழில் நிறுவனங்களின் சிக்கல்களைத் தீர்த்து, ஏற்கனவே உள்ள தயாரிப்பு மற்றும் தொழில் உத்திகளை ஊக்குவித்து, வணிகத்தை மேம்படுத்தி புதிய வாடிக்கையாளர்களை சென்றடைவதை வழிவகை செய்வதாகும். வணிக புதிய முயற்சிகள் ஊக்குவிப்பு என்பது மாநிலத்தின் தொழில் சூழல் அமைப்பில் உள்ள சவால்களை சமாளிக்கும் வகையில் மாற்று யோசனைகளை வடிவமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியனவாகும்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட தனிநபர் மற்றும் குழு தொழில் நிறுவனங்களுடன் புதிய தொழில் நிறுவனங்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும்

தொழில்துறை மாணவர்கள் இணைந்து வணிகப் புதுமைத் தொழில் திட்டங்களை செயல்படுத்த இத்திட்டம் வழிவகை செய்கிறது. இதுவரை, 10 மாவட்டங்களில் 14 புதுமையான வணிக திட்டங்கள் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் ரூ. 1.05 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**உ. நிறுவனங்களை நிறுவுதல்**

**(i) மதி சிறகுகள் தொழில் மையம் (MSTM)**

வணிக மேம்பாட்டு சேவைகளை வழங்குதல், வணிகத் திட்டம் தயாரித்தல், மதிப்பீடு செய்தல், மற்றும் வணிகத்தைத் தொடங்குவதற்கான ஆதரவு சேவைகளை ஊரக நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர் வழங்க "மதி சிறகுகள் தொழில் மையம்" நிறுவப்பட்டுள்ளது. இதுவரை, திட்டம் செயல்படும் மாவட்டங்களில் 42 மையங்கள் நிறுவப்பட்டுள்ளது.

மதி சிறகுகள் தொழில் மையம் மூலம், தொழில்முனைவோருக்கு பின்வரும் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை எண்.4**

| வ. எண் | சேவைகள் | வழங்கப்பட்ட வைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சட்ட ஆலோசனை மற்றும் பதிவுகள் – சேவைகள் | 22,124 |
| 2 | தொழில் சார்ந்த வழிகாட்டுதல்கள் போன்ற சேவைகள் | 491 |
| 3 | தொழில் வல்லுநர்களிடம் ஆலோசனை சேவைகள் | 473 |
| 4 | தொழில் திட்டம் தயாரித்தல் (MGP) | 11,658 |
| 5 | தொழில் திட்டம் தயாரித்தல் (இதர திட்டங்கள் / துறைகள் மூலம்) | 2,947 |

01.01.2023 முதல் பல்வேறு சேவைகளை வழங்குவதற்கான கட்டண அட்டைகள்

செயல்படுத்தப்பட்டது. இதுவரை மதி சிறகுகள் தொழில் மையம் மூலம் சேவைக் கட்டணமாக ரூ.92.34 லட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**ii. தமிழ்நாடு ஊரக தொழில் காப்பு மையம் மற்றும் புதிய தொழில் உருவாக்க மையம் (TN-RISE)**

பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு தொழில்முனைவு ஒரு சக்திவாய்ந்த கருவியாக உள்ளது. பெண் தொழில்முனைவோர் நிதி, சந்தை இணைப்பு, தொழில் கூட்டமைப்புகள் மற்றும் தொழில்நுட்பத்தை அணுகுவதில் தொடர்ந்து சிரமங்களை எதிர்கொள்கின்றனர், மேலும் பாலினம் சார்ந்த பிரச்சனைகள் அவர்களின் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் நிலைத்த தன்மையை பாதிக்கின்றது. கிராமப்புற பெண் தொழில்முனைவோர் கிராமப்புற மற்றும் நகர்ப்புற வேறுபாடு காரணமாக மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர்.

மகளிர் எதிர்கொள்ளும் இத்தகைய சவால்களுக்கு தீர்வு காணும் வகையில், பெண்களுக்கான பிரத்யேக புதிய தொழில் இயக்கம் அமைக்கப்படும் என தமிழக அரசு சட்டசபை அரங்கில் அறிவித்தது. இந்த அறிவிப்பை நிறைவேற்ற, வாழ்ந்துகாட்டுவோம் திட்டம், **தமிழ்நாடு ஊரக தொழில் காப்பு மையம் மற்றும் புதிய தொழில் உருவாக்க மையம் (Tamil Nadu Rural Incubator and Startup Enabler – TN–RISE)** என்ற பெயரில் புதிய நிறுவனத்தை உருவாக்கியுள்ளது. இந்த நிறுவனம்,

- ஆர்வமுள்ள பெண் தொழில்முனைவோரை மேம்படுத்துதல்
- பெண் தொழில்முனைவோருக்கு உயர்தர ஆதரவு சேவைகளை வழங்குதல்
- அவர்களின் வணிக எல்லைகளை விரிவுபடுத்துதல்.
- மகளிர் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு தேவையான உள்கட்டமைப்பு மற்றும் தொழில்முறை நிபுணத்துவம்

ஆகியவற்றை வழங்குதல்.

- தனிப்பயனாக்கப்பட்ட சந்தை இணைப்புகள், நிதியளித்தல் மற்றும் செயல்பாட்டு ஆலோசனைகளை வழங்குதல்
- உயர்தர வணிக அடைகாக்கும் சேவைகளை வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

**ஊ. தொழில்முனைவோருக்கு திறன் மேம்பாடு**

**(i) தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி**

தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டப் (Entrepreneurship Development Program – EDP) பயிற்சியானது நிதி, சந்தைப்படுத்தல், வணிகத் திட்டம் தயாரித்தல், பிற திட்டங்களுடன் ஒன்றிணைத்தல், சட்டப் பூர்வ இணக்கங்கள் போன்ற பல்வேறு அம்சங்களில் ரூ.2.02 கோடி செலவில் தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**(ii) முன்னோடி விவசாயிகளுக்குப் பயிற்சி**

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் (TNAU), வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (FCRI), ஆவின் திறன் மேம்பாட்டு மையம் (Aavin Skill Development Centre) மற்றும் ஆந்திர பிரதேச சமூக இயற்கை விவசாயம் (Andhra Pradesh Community Managed Natural Farming – APCNF) மூலம் 113 முன்னோடி விவசாயிகளுக்கு (SPARKs) பயிர், இயற்கை வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பு நடைமுறைகள் குறித்த இரண்டாம் நிலை சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும், திட்ட ஊழியர்களுக்கு தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (HCRI), பெரியகுளம் மூலம் வேளாண் நடைமுறைகள் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

**(iii) சான்றிதழ்**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், 205 சமுதாயத் திறன் பள்ளி பயிற்சியாளர்களுக்கு (கொத்தனார், தையல், எலக்ட்ரீசியன் மற்றும் இரு சக்கர வாகன பழுது பார்த்தல் போன்ற நான்கு தொழில்களின்) முன் கற்றல் அங்கீகாரத்தின் (Recognition of Prior Learning – RPL) கீழ் மதிப்பீடு செய்து சான்றிதழ் பெற்றுள்ளனர்.

**(iv) கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கான திறன் மேம்பாடு**

- திட்ட விளக்கம், நிர்வாகம், கையேடு பராமரித்தல், நிதி மேலாண்மை, வணிகத் திட்டம் தயாரித்தல் ஆகிய பயிற்சியானது, திட்டத்தின் அனைத்து புதிய மற்றும் ஏற்கனவே உள்ள உற்பத்தியாளர் கூட்டமைப்புகளின் முதன்மை செயல்

அலுவலர் (CEO) மற்றும் இயக்குநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, அனைத்து உற்பத்தியாளர் கூட்டமைப்புகளுக்கும் அந்தந்த விளைப்பொருட்கள் குறித்த பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

- பேக்கேஜிங் மற்றும் பிராண்டிங்கின் முக்கியத்துவம் குறித்த நான்கு நாட்கள் பயிற்சி, இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் பேக்கேஜிங்(IIP) சென்னை ,மூலம் உற்பத்தியாளர் கூட்டமைப்புகளின் இயக்குநர்கள் மற்றும் முதன்மை செயல் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.
- உற்பத்தியாளர் கூட்டமைப்புகளுக்கும், அலுவலர்களுக்கும் மேலாண்மை மேம்பாட்டுப் பயிற்சி (MDP), ஊரக மேலாண்மை மற்றும் பயிற்சி நிறுவனம், IRMA மூலம் நான்கு நாட்கள் பயிற்சி

அளிக்கப்பட்டது.

- மதுரை வேளாண் வணிக காப்பீட்டு நிறுவனம் (MABIF) மூலம் 34 புதிய உற்பத்தியாளர் கூட்டமைப்புகளின் இயக்குநர்கள் மற்றும் முதன்மை செயல் அலுவலர்களுக்கு மூன்று நாட்கள் நிதி மேலாண்மை பயிற்சி நடத்தப்பட்டது.
- அனைத்து இயக்குநர்கள் மற்றும் புதிய உற்பத்தியாளர் கூட்டமைப்புகளின் முதன்மை செயல் அலுவலர்கள், வேளாண் துறையால் உருவாக்கப்பட்ட ஐந்து செயல்திறன் கொண்ட உற்பத்தியாளர் கூட்டமைப்புகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.
- உற்பத்தியாளர் கூட்டமைப்பின் சிறந்த நடைமுறைகளைக் கற்பதற்காக திட்ட ஊழியர்கள் மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்புகளின் முதன்மை செயல்

அலுவலர்கள் நாசிக்கிலுள்ள சகாயத்ரி உழவர் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

- தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை போன்ற பல்வேறு துறைகளால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநில அளவிலான கண்காட்சியில் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்தினர்.

**(v) திட்ட பணியாளர்களுக்கான திறன் மேம்பாடு**

- சர்வதேச நிதி நிறுவனத்தின் மூலம் இத்திட்டப் பணியாளர்களுக்கு சிறு, குறு நிறுவனங்களுக்கான கடன் உதவி வழங்கிட முறையான நிதி நிறுவனங்கள் மூலம் மூன்று முறை பயிற்சி நடத்தப்பட்டது. இதில் 150 முதன்மை பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்றனர். தொடர் பயிற்சி முறை மூலம்

மாவட்ட ஊழியர்கள், வட்டார ஊழியர்கள் மற்றும் தொழிற்சார் சமூக வல்லுநர்கள் பயிற்சி பெற்றனர்.

- உற்பத்தியாளர் கூட்டமைப்பிற்கான நிதியுதவி பயிற்சி அனைத்து இளம் வல்லுநர்களுக்கும், தொழில் வல்லுநர்களுக்கும், நிறுவன மேம்பாட்டு அலுவலர் / நிறுவன நிதி அலுவலர் / செயல் அலுவலர்கள், நிறுவன நிதி வல்லுநர்கள் & உற்பத்தியாளர் கூட்டமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரிகளுக்கும் இந்திய மேலாண்மைக் கழகம் திருச்சிராப்பள்ளியில் (IIM, Tiruchirappalli) பயிற்சி வழங்கப்பட்டது.
- 35 திட்டப் பணியாளர்கள் (செயல் அலுவலர்கள் – நிதி நிறுவன மேம்பாடு, நிறுவன நிதி வல்லுநர்கள்) ஊரக மேலாண்மை மற்றும் பயிற்சி நிறுவனம் IRMA மூலம் பயிற்சி வழங்கப்பட்டது.

**ஏ. கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு**

கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (M&E) என்பது திட்டத்தில் ஏதேனும் குறைபாடுகளோ அல்லது திட்ட இலக்கில் இருந்து விலகலோ இருப்பின் அதனைக் கண்டறிந்து குறிப்பிட்ட காலத்திற்குள் சரி செய்ய திட்ட மேலாளர்களுக்கு உதவி செய்யவும், திட்ட செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்த விபரங்களை தயார் செய்வதற்கும் தொடர்ந்து இயங்கும் ஒரு செயல் முறையாகும். இது திட்டச் செயலாக்கத்தின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய யதார்த்தமான, நிகழ்நேர மற்றும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய தகவல்களை வழங்கும்.

**(i) கொரோனா** சிறப்பு **நிதி (CAP) தாக்கம் குறித்த** மதிப்பீடு **– நிதி மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (IFMR)**

தமிழ்நாட்டின் 31 மாவட்டங்கள் மற்றும் 120 வட்டாரங்கள் முழுவதும் கொரோனா சிறப்பு நிதி மூலம் ஏற்படுத்தப்பட்ட தாக்கத்தை

மதிப்பிடுவதற்கான அடிப்படை, இறுதிகட்ட மற்றும் நிறுவனங்கள் விவரக்குறிப்பு கணக்கெடுப்பை நடத்தும் நோக்கத்திற்காக IFMR நிறுவனம் ஈடுபடுத்தப்பட்டது.

அளவு மற்றும் தரமான அம்சங்களை சேகரிப்பதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்காணல்களை பின்பற்றி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**(ii) குறைகளை தீர்க்கும் செயல்முறை**

தொழில் முனைவோராக உள்ள சுய உதவிக்குழு குடும்ப உறுப்பினர்களுக்கு பணியிடத்தில் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. திட்ட செயல்பாட்டாளர்கள் மற்றும் பயனாளிகள் திட்ட மாவட்டங்களில் இருந்து குறை தீர்க்கும் செயல்முறை (GRM) புகார்களை பதிவு செய்ய இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட புகார்களுக்கு அந்தந்த மாவட்ட

திட்ட மேலாண்மை அலகினால் (DPMU) தீர்வு காணப்படுகிறது. இதுவரை, 308 புகார்கள் இணையத்தளத்தில் பதிவு செய்யப்பட்டு, அவற்றில் 302 தீர்க்கப்பட்டுள்ளன.

**(iii) தகவல் மேலாண்மை அமைப்பு**

தகவல், தொடர்பு மற்றும் தொழில்நுட்பம் (ICT) என்பது திட்டத்தின் செயல்பாடுகளை நிகழ்நேர கண்காணிப்பு மற்றும் அவற்றின் திறமையான செயல்பாட்டிற்கான இணையதளத்தை நிறுவுவது இன்றியமையாததாகும். இந்த திட்டத்திற்கான ஒருங்கிணைந்த இணையதளம் (IDP) உருவாக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளது.

ஒருங்கிணைந்த இணையதளத்தில் (www.idp.tnrtp.org), கோவிட் நிதி உதவித் தொகுப்பு (CAP), மாவட்ட பகுப்பாய்வு அறிக்கைகள் (DDS), மதிப்புத் தொடர் ஆய்வு அறிக்கைகள் (VCA), குறை தீர்க்கும் செயல்முறை (GRM),

இளைஞர்கள் விபரங்கள் குறித்த தரவுத்தளம் (YDB), பண்ணை விபரங்கள் குறித்த தரவுத்தளம் (FDB), இணை மானிய நிதி திட்டம் (MGP), சமுதாயத் திறன் பள்ளிகள் (CSS), சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் (CFS), நுண் தொழில் நிறுவனங்களுக்கான நிதி (NEFF), அறிவு சார் மேலாண்மை தகவல் களஞ்சியம் (KMR), தொழில் நிறுவன மேம்பாடு (EPM) மற்றும் மதி சிறகுகள் தொழில் மையம் (MSTM) ஆகிய திட்ட கூறுகள் செயல்பாட்டில் உள்ளன.

இந்த ஒருங்கிணைந்த மின்னணு தளத்தின் பயன்பாடு, இத்திட்டத்தின் தகவல் மேலாண்மை அமைப்பை (MIS) பலப்படுத்துகிறது. மேலும், திட்டம் குறித்த அனைத்து தரவுகளையும் உடனுக்குடன் பெறும் வகையிலும் செயல்படுகிறது.

**அ) அறிவு சார் மேலாண்மை மற்றும் தகவல் தொடர்பு**

- இந்த துணை கூறுகளின் நோக்கம்,

செயல்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட அறிவுத் தகவலினை திறம்பட இயக்குவதற்கான வழிமுறைகள் மற்றும் செயல்முறைகளை உருவாக்குவதுடன் முதன்மை, இரண்டாம்–நிலை பங்குதாரர்கள் மற்றும் வெளிப்புற பார்வையாளர்களுக்கு தொடர்பு தொகுப்பு மூலம் பரப்பப்படுகிறது. இவ்வாறு உருவாக்கப்படும் அறிவுத் தகவல்கள், திட்ட செயலாக்கம் தொடர்பான கற்றல் மற்றும் திறன் மேம்பாட்டிற்கு திறம்பட பயன்படுத்தப்படும்.

- தகவல் கல்வி தொடர்பு (IEC), சமூக ஊடக மேலாண்மை, வலை தள மேலாண்மை, காணொளி, வெற்றிக் கதைகள் மற்றும் புகைப்படத்தின் ஆவணங்கள், மக்கள் மற்றும் ஊடகத் தொடர்பு, திட்ட படைப்பாளிகளுக்கான உள்ளடக்க உருவாக்கம், வடிவமைப்பு, மற்றும் நிகழ்வு & கண்காட்சி மேலாண்மை ஆகியவை

இந்த துணைக் கூறினால் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் ஆகும்.

**ஆ) சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்பு (ESMF)**

சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்பின் (ESMF) முதன்மை நோக்கம், திட்டத் தலையீடுகளின் நீண்டகால சுற்றுச்சூழல் மற்றும் சமூக நிலைத்தன்மைக்கு உத்தரவாதம் அளிப்பதாகும். நிறுவனங்களால் ஏற்படும் எதிர்மறையான சுற்றுச்சூழல் மற்றும் சமூக விளைவுகளை முன்கூட்டியே நிவர்த்தி செய்வதும் குறைப்பதும், அதே நேரத்தில் அவற்றின் நேர்மறையான சுற்றுச்சூழல் மற்றும் சமூக பங்களிப்புகளை அதிகரிப்பதும் இதன் நோக்கமாகும். கூடுதலாக, கட்டமைப்பு சூழல் நட்பு நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் மதிப்புச் சங்கிலிகளின் நீடித்த

சுற்றுச்சூழல் மற்றும் சமூக நிலைத்தன்மையைப் பாதுகாத்து வருகிறது.

- 31 மாவட்டங்களில் உள்ள 1218 குழு நிறுவனங்களுக்கு ஒரு விரிவான கண்காணிப்பு செயல்முறை நடத்தப்பட்டுள்ளது. இந்தக் குழுக்கள் 524 தயாரிப்பாளர் குழுக்கள், 591 நிறுவனக் குழுக்கள், 50 MGPகள் மற்றும் 53 தயாரிப்பாளர் தொகுப்புகளை கொண்டுள்ளது. இந்தக் கண்காணிப்பின் விளைவாக, சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் குறைப்பதற்கும் அவர்களின் வணிகச் செயல்பாடுகளில் ஆற்றல் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் இலக்காகக் கொண்ட தீர்வு நடவடிக்கைகளைச் செயல்படுத்த பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.
- பசுமைத் தணிக்கைகள் முடிந்ததைத் தொடர்ந்து, பண்ணை மற்றும் பண்ணை

சாரா 280 வணிகங்களின் கார்பன் உமிழ்வைக் கண்டறிய மதிப்பீடு செய்யப்பட்டதில் சுமார் 4.6 டன் $CO_2$ உமிழ்வுகள் 2022க்கும் 2023க்கும் இடையில் குறைவடைந்துள்ளதை தணிக்கை மூலம் கண்டறியப்பட்டது.

- இது VKPஆல் ஆதரிக்கப்படும் நிறுவனங்களில் சுமார் 5% ஆகும். இந்த பசுமை முயற்சிகளின் விளைவாக, பயனாளிகள் எதிர்காலத்தில் கார்பன் வரவுகளைப் பெறுவதற்கான வாய்ப்பைப் பெறலாம்.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த நடவடிக்கைகள் மற்றும் வணிக நடைமுறைகளை செயல்படுத்துவதன் அடிப்படையில், பசுமை மதிப்பீடுகளை வழங்குவதற்காக ESMF 53 உழவர் உற்பத்தியாளர் தொகுப்புக்கு மதிப்பீடுகளை நடத்தியது.

- மதிப்பீடு செய்யப்பட்ட 53 FPCக்களில், 50 கூட்டமைப்புகள் புதுமையான பசுமை நடைமுறைகளை மேற்கொள்வதற்காக பசுமை ஊக்க நிதியைப் பெற தகுதியானவையாகும். 2022 ஆம் ஆண்டில், 14 FPCகள் பசுமை மதிப்பீடுகளுடன் அங்கீகரிக்கப்பட்டன, இது மொத்த பசுமை மானிய நிதியான ரூ. 23 லட்சம். 2024–ஆம் ஆண்டில், பசுமை முயற்சிகளை மேலும் மேம்படுத்துவதற்காக 38 FPC களுக்கு 1.55 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
- பங்கேற்பு உத்திரவாத அமைப்பு (PGS) சான்றிதழின் கட்டமைப்பிற்குள், 133 விவசாயிகளுக்குச் சொந்தமான மொத்தம் 160.42 ஏக்கர் இயற்கை வேளாண்மைக்கான மண்டல குழுமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**10.3 2024–25–ஆம் ஆண்டிற்கு முன்மொழியப்பட்டுள்ள செயல்பாடுகள்**

- 10 உற்பத்தியாளர் கூட்டமைப்புகளுக்கு ரூ. 50 கோடி விடுவிக்கப்படும்.
- திட்ட ஊழியர்களுக்கு இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மென்ட் (IIM) கொல்கத்தா மூலம் ரூ2.00. கோடி செலவில் நிறுவன மேம்பாடு பற்றிய பயிற்சி திட்டமிடப்பட்டுள்ளது.
- 9 உற்பத்தியாளர் கூட்டமைப்பிற்கு அவர்களை மேம்படுத்த கடன் உதவி இணை மானிய நிதித் திட்டம் மூலம் கடன் வழங்கப்படும்.

# 11. முடிவுரை

## முடிவுரை

தமிழ்நாடு அரசு மகளிரின் ஒட்டு மொத்த முன்னேற்றத்திற்கு முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது. இதில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மகளிரின் ஒட்டு மொத்த வளர்ச்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, ஏழை மற்றும் விளிம்பு நிலையில் உள்ள மகளிருக்கு திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதார திட்டங்களின் மூலம் அவர்களின் சமூக பொருளாதார மற்றும் அரசியல் அதிகாரமளிப்பு முன்னேற்றத்தை உறுதி செய்வதில் மிக முக்கிய பங்காற்றி வருகிறது.

ஊரக மற்றும் நகர்ப்புர பகுதிகளில் விளிம்பு நிலையில் உள்ள இலக்கு மக்களின் சமூக மேம்பாட்டிற்கு வாழ்வாதார இயக்கமானது உறுதியளிக்கிறது. விடுபட்ட அனைத்து மகளிரையும் குழுக்களில் இணைத்து, பயிற்சிகள் மூலம் திறனை மேம்படுத்தி, அவர்களை சமுதாயம்

சார்ந்த அமைப்புகளோடு இணைப்பதற்கு இந்நிறுவனம் தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் உள்ள சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் திறனை மேம்படுத்தி சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கும், அவர்களின் வாயிலாகவும் பல்வேறு அரசு திட்டங்களின் நன்மைகளை கொண்டு செல்வதை உறுதி செய்கிறது.

தமிழ்நாடு அரசு, பொருளாதார மேம்பாட்டையும், சமுதாயத்தில் பாலின சமத்துவத்தை அடைந்திட பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளின் மூலம் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு பாலினம் மற்றும் சமத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மகளிர் தங்கள் உரிமைகளைப் பெற்றிடவும், தேவைப்படும்போது சட்ட ஆதரவு அமைப்புகளை அணுகவும் தொடர்ந்து உதவி புரிந்து வருகிறது. மேலும், சமூக

மற்றும் பொருளாதார ரீதியாக, விளிம்பு நிலை மற்றும் பின்தங்கிய ஏழை குடும்ப மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் நலத்திட்டங்கள் சென்றடைவதை உறுதி செய்வதற்கு சிறப்பு உத்வேகம் அளிக்கப்படுகிறது.

பண்ணை சார் மற்றும் பண்ணை சாரா வாழ்வாதார நடவடிக்கைகளை மேலும் வலிமைப்படுத்துவதற்கான தொகுப்பு நடவடிக்கைகள், மதிப்பு கூட்டுதல், சந்தைப்படுத்துதல் மற்றும் வணிக அடையாளக் குறியீடு ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகிய திட்டங்கள் இணைந்து செயல்படுகிறது. ஒருங்கிணைந்த வளங்களின் மூலம் சிறப்பான செயல்பாடுகளை வெளிக்கொணர்தல் மற்றும் சமுதாயத்திற்கு மதிப்பளிக்கும் முன்மாதிரிகள் போன்றவற்றின்

மூலம் இந்த இயக்கங்களுக்கிடையே வலிமையான பிணைப்பு ஏற்படுகிறது.

அரசு திட்டங்களின் பயன்கள், ஏழை எளிய மக்களைச் சென்றடைவதை உறுதி செய்வதே அரசின் நோக்கமாகும். இத்திட்டங்கள் மற்றும் சேவைகளை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கூட்டமைப்பின் வாயிலாக மிகவும் பின்தங்கிய கடைக்கோடி குடும்பங்களையும் சென்றடைவதை உறுதி செய்து, சுய உதவிக் குழுக்கள் மற்றும் அவர்கள் குடும்பங்களின் வாழ்க்கையும் வாழ்வாதாரமும் மேம்படுவதற்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அனைத்து துறைகளுடனும் இணைந்து, ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின்** அவர்களின் ஆற்றல் மிக்க தலைமையின் கீழ் அனைத்து விதமான

வளர்ச்சிகளை உள்ளடக்கிய வறுமையற்ற தமிழ்நாட்டை உருவாக்க வேண்டுமென்ற தொலைநோக்கு பார்வையினை நிறைவேற்றும் வகையில் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து செயல்படுத்தி வருகிறது.

**உதயநிதி ஸ்டாலின்**
இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு
மேம்பாட்டுத் துறை அமைச்சர்
தமிழ்நாடு அரசு

# மாநில அளவில் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்கும் விழா



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்கப்பட்டது

## மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்கும் விழா



## மாவட்ட வாரியாக ஊரக மற்றும் நகர்ப்புரங்களில் உள்ள மதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை – 31.03.2024 வரை



## மாவட்ட வாரியாக அனைத்து சுய உதவிக் குழுக்களின் வங்கிக் கடன் இணைப்பு (2023–24)



## மகளிர் சுய உதவிக் குழுக்களின் வங்கிக் கடன் இணைப்பு ஆண்டு வாரியான சாதனை
## (2001 முதல் 2023–2024 வரை)



# மாநில அளவிலான மதி அனுபவ அங்காடி










இடம்: அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை -34

# சந்தைப்படுத்துதல் முயற்சிகள்



கல்லூரி சந்தை



இயற்கை சந்தை

## சந்தைப்படுத்துதல் முயற்சிகள்







சிறுதானிய உணவகம்





மதி எக்ஸ்பிரஸ்

## மதிசந்தை இணையதளம் – www.mathisandhai.com



## மாண்புமிகு அமைச்சர் அவர்களால் நகர்ப்புர சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு வழங்கும் விழா



## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வாழ்வாதார நடவடிக்கைகள்



கூடை முடைதல்




சணல் பை தயாரித்தல்



தையல் பயிற்சி



காளான் வளர்ப்பு

## தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி (DDU–GKY)





சர்வதேச வேலைவாய்ப்புகள்





**மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டத்தின் கீழ் பணி நியமன ஆணை வழங்கும் விழா**



## வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் தொழில் நடவடிக்கைகள்



நிறுவனக் குழுக்கள்



உற்பத்தியாளர் குழுக்கள்



உற்பத்தியாளர் தொகுப்புகள்



இணை மானிய நிதித் திட்டம்



சமுதாய திறன் பள்ளிகள்



சமுதாய பண்ணை பள்ளிகள்

## பிற துறைகளுடன் ஒருங்கிணைந்த செயல்பாடுகள்





மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டம்

## பிற துறைகளுடன் ஒருங்கிணைந்த செயல்பாடுகள்





மக்களைத் தேடி மருத்துவம்